இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 54 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 15 – திங்கள்கிழமை 02 அக்டோபர் 2023 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 54: Thiruvalluvar Year - 2054 - Puruttasi 15 - Monday 02 October 2023 - Chennai 10 Pages ₹ 5.00



நாடாளுமன்றத் தேர்தல் குறித்து மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்துரை வழங்கினார்!

## ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது! 'இந்தியா' கூட்டணிதான் ஆட்சி அமைக்கும்! - புதுவை உள்ளிட்ட

# 40 தொகுதிகளிலும் வென்றிட திட்டமிட்டு உழையுங்கள்!

### மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்துரை!

**சென்னை, அக்.02-**

**மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை காணொலி மூலம் உரையாற்றுகையில், ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது என்றும் 'இந்தியா' கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்றும் - புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வென்றிட திட்டமிட்டு உழையுங்கள் என்றும் கருத்துரை வழங்கினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (1.10.2023) மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர் பெருமக்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் ஆகியோர் பங்கேற்ற கலந்தாலோசனைக் கூட்டம், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

அதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பொது முக்கியத்துவம் வாய்ந்த சில கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு, விரைந்து செயல்பட வேண்டிய காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். அதனால்தான் உடனடியாகக் காணொலி மூலமாக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இந்தியா கூட்டணியில் வலுவான கட்சிகள் இடம் பெற்றுள்ளன!**

நம்மை எதிர்நோக்கி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட நாற்பது தொகுதியிலும் நாம் வெற்றி பெற வேண்டும். தமிழ்நாட்டில் அடைவது போன்ற வெற்றியை இந்தியா முழுமைக்கும் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.

அகில இந்தியக் கட்சிகளும் பல்வேறு மாநிலங்களை ஆளும் கட்சிகளும் - வலுவான மாநிலக் கட்சிகளும் - இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ளன. பாரதீய ஜனதா கட்சி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்க முடியாது; இந்தியா கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டு விட்டது. எனவே, இந்த நேரத்தில் நமது பொறுப்பும் கடமையும் அதிகமாகி உள்ளது.

> **“அகில இந்தியக் கட்சிகளும் பல்வேறு மாநிலங்களை ஆளும் கட்சிகளும் - வலுவான மாநிலக் கட்சிகளும் - இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ளன. பாரதீய ஜனதா கட்சி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்க முடியாது; இந்தியா கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டு விட்டது. எனவே, இந்த நேரத்தில் நமது பொறுப்பும் கடமையும் அதிகமாகி உள்ளது.”**

**சிறப்பு மாநாடுபோல் நடைபெற்ற பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள்!**

நாடாளுமன்றத் தேர்தல் பணியை கடந்த ஆறு மாதத்துக்கு முன்பே நாம் தொடங்கினோம். நமது வெற்றிக்கு அடித்தளமாக விளங்கக்கூடிய வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை நியமித்தோம். இதுவரையில் அவர்களுக்கான மூன்று பயிற்சிபாசறைக் கூட்டங்கள், தேர்தல் சிறப்பு மாநாடுகளைப் போல நடந்துள்ளன. அடுத்ததாக வடக்கு மண்டல பயிற்சி பாசறைக் கூட்டம் திருவண்ணாமலையிலும், சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டமும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி பாசறைக் கூட்டங்களில் நாம் எடுத்துச் சொன்னதைச் செயல்படுத்தினாலே போதும். முழுமையான வெற்றியை நாம் அடைந்து விடலாம்.

**மக்கள் சரியாக இருக்கிறார்கள் திட்டமிட்டு உழைத்தால் வெற்றி உறுதி!**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட 39 தொகுதிகளை வென்றோம் என்றால், நடக்க இருக்கும் தேர்தலில் 40 தொகுதிகளையும் வென்றாக வேண்டும். எந்தவொரு தனி மனிதரையும் விட இயக்கமும் - இயக்கம் அடைய வேண்டிய வெற்றியும்தான் முக்கியம்.

மக்கள் நன்றாக இருக்கிறார்கள். அதனை வாக்குகளாக மாற்றுவதற்கு உழையுங்கள். உழைப்பும் செயல்பாடும்தான் வெற்றியைப் பெற்றுத் தரும். திட்டமிட்டு உழையுங்கள். தி.மு.க. கூட்டணி அனைத்துத் தொகுதியிலும் வெற்றி பெற உழையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு,

# புகழ்பெற்ற 'தி எகனாமிஸ்ட்' ஆங்கில இதழ் பாராட்டு!

### 'கவர்ச்சி அரசியல் செய்வதை விட பட்டறிவின் அடிப்படையில் சிக்கல்களை அணுகுகிறார்!' - எனப் புகழாரம்!

உலகின் தலைசிறந்த பத்திரிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படும் “தி எகனாமிஸ்ட்” 177 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. அரசியல், வணிகம், தொழில்நுட்பம் என பல்வேறு தளங்களில் கட்டுரைகள் வெளியிடும் “தி எகனாமிஸ்ட்” இதழுக்கு உலகம் முழுக்க 16 லட்சத்திற்கும் மேற்பட்ட சந்தாதாரர்கள் இருக்கின்றார்கள்.

இப்படி பல பெருமைகளைக் கொண்ட “தி எகனாமிஸ்ட்” இதழில், ஒரு முழுப் பக்க அளவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறித்தும் - அவரது அரசின் செயல்பாடுகள் குறித்து புகழ்ந்தும் கட்டுரை வெளியாகியுள்ளது.

“Meet the Dravidan stalin” என்னும் தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரை, “இந்தியாவின் தலைவரான பிரதமர் மோடி அளிக்காத செயல்திறனை வழங்கும் தமிழ்நாட்டின் தலைவர்” என மு.க.ஸ்டாலின் அவர்களை புகழ்ந்து உள்ளது.




சோவியத் ஒன்றியத்தின் தலைவராக இருந்த ஜோசப் ஸ்டாலின் இறந்த அதே வாரத்தில் பிறந்த தனது மகனுக்கு அவரது நினைவாக ஸ்டாலின் என கலைஞர் பெயர் சூட்டியது குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மு.க.ஸ்டாலின் கவர்ச்சி அரசியல் செய்வதை விட, பட்டறிவின் அடிப்படையில் பொருத்தமான முறையில் சிக்கல்களை அணுகுவதாக அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டஃப்லோ மற்றும் பிரதமர் மோடி அரசின் பொருளாதாரக் கொள்கைகளுடன் மாற்றுக் கருத்துக் கொண்ட ரகுராம் ராஜன் உள்ளிட்ட ஐந்து பொருளாதார அறிஞர்கள் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழு; மாநிலத்தின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டதைக் குறிப்பிட்டுள்ள “தி எகனாமிஸ்ட்”, இந்த நியமனங்கள் பிரதமர் மோடிக்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலி னுக்கும் இடையே யான வேறுபாட்டை காட்டும் வகையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் பிரதமர் மோடியின் அதிகாரப் பரவலாக்கும் முயற்சிகளுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் முகமாக மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளதாகவும், எதிர்வரும் 2024 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பிரதமர் மோடியை எதிர்த்துக் களம் இறங்கப் போவது யார் என்ற கவனம் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, பினராயி விஜயன் ஆகியோர் மீது விழுந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




1990-ஆம் ஆண்டுகளில் சென்னையின் மேயராகப் பதவியேற்றதிலிருந்தே மக்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை மு.க.ஸ்டாலின் பிடிக்கத் தொடங்கிவிட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

கொரோனா தொடர்பாக அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சி பிரதிநிதிகளின் குழுவில் முந்தைய அ.தி.மு.க. அரசின் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கரை இணைப்பதன் மூலம் - ஒரு சிறந்த நடைமுறையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கி உள்ளதாகவும் “தி எகனாமிஸ்ட்” புகழாரம் சூட்டியுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 02-10-2023

# வாச்சாத்தி - அ.தி.மு.க.வின் கொடூரம்!

அ.தி.மு.க.வின் ஆட்சியின் கொடூரத்தன்மைக்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது வாச்சாத்தி!

குற்றவாளிகள் 215 பேருக்கும் தண்டனையை உறுதி செய்துள்ளது உயர்நீதிமன்றம். இதன் மூலம் ஜெயலலிதா ஆட்சி காலத்தின் அநியாயம், அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

**தர்மபுரி மாவட்டத்தில் ஆரூர் - பாப்பிரெட்டிப்பட்டி நகரங்களுக்கு இடையே அமைந்துள்ள கல்வராயன் மலை தொடரின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது வாச்சாத்தி மலை கிராமம். சந்தன மரக் கடத்தலை தடுக்கப் போகிறோம் என்று சொல்லி அ.தி.மு.க. ஆட்சியில் மிகக் கொடூரம் 1992ஆம் ஆண்டு ஜூன் 20ஆம் தேதி அரங்கேறியது. அந்தக் கிராமமே சிதைக்கப்பட்டது. ஒரு சிறுமி உள்பட 18 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.**

ஜூன் 22 அன்று பழங்குடியின மக்கள் சேர்ந்து அரூர் காவல் துறையில் புகார் கொடுத்தார்கள். ஆனால் அன்றைய போலீஸ் அதனை வாங்கவில்லை. பழங்குடியினர் அமைப்பும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இதனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி அ.தி.மு.க. ஆட்சி மீது நம்பிக்கை இல்லாமல், சி.பி.ஐ.க்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. வனத்துறையை சேர்ந்த 155 பேர், காவல்துறையை சேர்ந்த 108 பேர், வருவாய்த்துறையினர் 6 பேர் என 269 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கின் தீர்ப்பு 2011 ஆம் ஆண்டு வெளியானது. அப்போது உயிருடன் இருந்த 215 பேரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, தண்டனையும் விதிக்கப்பட்டது. 12 பேருக்கு 10 ஆண்டுகள் சிறையும், 5பேருக்கு 7ஆண்டுகள் சிறையும், மற்றவர்களுக்கு 1-3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துதீர்ப்புவழங்கியது. இதன்மேல்முறையீடுசென்னைஉயர்நீதிமன்றத்தில் நடந்தது. நீதியரசர் வேல்முருகன், கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்துள்ளார்.

இந்த குற்றச்சம்பவம், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது நடந்தது. தமிழ்நாடு பழங்குடியினர் சங்கத்தின் செயலாளர் பி.சண்முகம், வாச்சாத்தி கிராமத்துக்கு வந்து பார்வையிட்ட பிறகுதான் இந்த கொடூரம் வெளிச்சத்துக்கு வந்தது. அன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகம் இப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்று சமாளித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் அ.நல்லசிவன், இந்தப் பிரச்சினையை நீதி விசாரணை நடத்தக் கோரி அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதினார். இதற்குப் பதிலளித்த அப்போதைய வனத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், அதிகாரிகளைப் பாதுகாத்து அறிக்கை வெளியிட்டார்.

**சில அரசியல் கட்சிகள் இதனை பெரிதுபடுத்துவதாக அ.தி.மு.க. ஆட்சியின் மாவட்ட ஆட்சியர் அறிக்கை கொடுத்தார். பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டை முழுமையாக அ.தி.மு.க. ஆட்சி மறுத்தது.வீடுகளை அவர்களே இடித்துக் கொண்டதாகவும் அ.தி.மு.க. ஆட்சி சொன்னது. தாங்கள் விசாரணை ஆணையம் அமைத்திருப்பதாக அறிவித்தார்கள். அந்த ஆணையம் வாச்சாத்திக்கு செல்லவே இல்லை. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அன்றைய செயலாளர், வாச்சாத்தியில் வசிப்பவர்கள் வனத்துறை மற்றும் காவல்துறையினரின் கொடூரமான தாக்குதலுக்கு பலியானதாகக் கூறப்படுவதை மறுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் எதிர் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார்.**

அன்றைய அ.தி.மு.க. ஆட்சி எப்படி நடந்து கொண்டது என்பது குறித்து, 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் (30.9.2023) கட்டுரையாளர் பி.வி.ஸ்ரீவித்யா விரிவாக எழுதி இருக்கிறார்.

"அப்போதைய போக்குவரத்து துறை அமைச்சர் செங்கோட்டையன், பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளை அடையாளம் காட்டும் 'அணிவகுப்பை' சீர்குலைப்பதற்காகவே அரூர் அரசு பங்களாவில் அவர் தங்கி இருந்ததாக பழங்குடியின செயற்பாட்டாளர் கிருஷ்ணமூர்த்தி குற்றம்சாட்டுகிறார். ஊத்தங்கரை மாஜிஸ்திரேட் மேற்பார்வையில் அடையாள அணிவகுப்பு நடைபெற இருந்தது. ஆனால் அதை நடத்துவதற்கு பாதுகாப்பு தேவை என உயர்நீதிமன்றத்திற்கு மாஜிஸ்திரேட் கடிதம் எழுதிவிட்டு அங்கு செல்லவில்லை. பின்னர், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்க ஒவ்வொரு 10 மீட்டருக்கும் ஒரு போலீஸ்காரர் நியமிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. பிறகு சேலம் சிறையில் அந்த அணிவகுப்பு நடத்த உத்தரவிடப்பட்டது. 18 இளம் பெண்கள் தங்களை துன்புறுத்தியவர்களை அடையாளம் காட்டினர். அந்த அணிவகுப்பின் போது பல்வேறு விதமாக வேஷ்டி, சட்டை மற்றும் துண்டுகள் எல்லாம் உடுத்தி அந்த பெண்களை குழப்பும் வகையில் செயல்பட்டு வந்தனர். வெயில் அதிகமாக இருக்கிறது என கூறி வெயிலில் நிற்க மறுத்தனர். அதில் இருந்து தப்பிப்பதற்காக செங்கோட்டையன் மற்றும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சிங்காரம் உதவியோடு பல முயற்சிகளை மேற்கொண்டனர். அந்த அணிவகுப்பு மூன்று முறை நடத்தப்பட்டது. மீண்டும் மீண்டும் அந்தப் பெண்கள் அவர்களை தீர்மானகரமாக அடையாளம் காட்டிக்கொண்டே இருந்தனர். கம்யூனிஸ்ட் தலைவர் நல்லசிவம், வாச்சாத்திக்கு சென்று, நடந்த கொடுமைகள் குறித்து செய்தியாளர் சந்திப்பு நடத்தினார். அப்போது, 'வாச்சாத்தி மலையடிவார கிராமம் என்பதுகூடதெரியாமல்,நல்லசிவம்வயதானதன்கால்களைவைத்துக்கொண்டு எப்படி மலை கிராமத்திற்கு சென்று பார்த்தார்' என செங்கோட்டையன் கிண்டலாக பேசியுள்ளார்" என்று எழுதி இருக்கிறது, 'தி.இந்து' ஆங்கில நாளிதழ்.

அதனால்தான், அன்றைய அ.தி.மு.க. ஆட்சிக்கான கண்டனத்தையும் சென்னை உயர்நீதிமன்றம் பதிவு செய்துள்ளது. வாச்சாத்தியில் பழங்குடியின பெண்களை பாதுகாக்க அக்கறை காட்டாத அப்போதைய அரசு, தவறிழைத்த அதிகாரிகளை பாதுகாக்கவே முற்பட்டதாக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வாச்சாத்தி பகுதியில் சில பெரும் புள்ளிகள் சந்தன கடத்தலில் ஈடுபட்ட நிலையில், அப்பாவி கிராம மக்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும், கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வனத்துறை எந்த வழக்கையும் பதிவு செய்யவில்லை என அதிருப்தி தெரிவித்துள்ளார். வன்முறையில் ஈடுபட்ட உண்மை குற்றவாளிகள் யார் என்று தெரிந்தும் கூட, மாவட்ட ஆட்சியரோ, மாவட்ட வன அதிகாரியோ, காவல் கண்காணிப்பாளரோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல் குற்றவாளிகளை பாதுகாத்துள்ளதாக அதிருப்தி தெரிவித்துள்ளார். உண்மையான சந்தன கடத்தல்காரர்களை காப்பாற்றும் நோக்கில், அப்போதைய அரசின் உதவியுடன் வனத்துறை, காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் இந்த வன்முறை வெறியாட்டத்தை அரங்கேற்றி இருக்கிறார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார்.

**அப்போதைய அரசு, பழங்குடியின பெண்களை பாதுகாக்க அக்கறை காட்டவில்லை எனவும், மாறாக தவறிழைத்த அதிகாரிகளை பாதுகாக்கவே முற்பட்டதாகவும் கடும் கண்டனத்தை நீதிபதி வேல்முருகன் பதிவுசெய்துள்ளார்.**

**அம்மா ஆட்சியின் எத்தனையோ அவலங்களுக்கு 'வாச்சாத்தியும்' கொடூரமான அடையாளமாக வரலாற்றில் பதிவாகி உள்ளது.**

●●

## வைகை, கோவை விரைவு ரயில் பயண நேரம் அதிகரிப்பு!

*சென்னை, அக்.2- வந்தே பாரத் ரயில் சேவை காரணமாக, சென்னை மதுரை இடையே இயக்கப்படும் வைகை விரைவு ரயில், மதுரை கோயம் புத்தூர் சந்திப்புக்கு இயக்கப்படும் விரைவு ரயில் ஆகியவற்றின் பயண நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், பயணிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.*

*இந்நிலையில், வந்தே பாரத் ரயில் சேவை காரணமாக, சென்னை மதுரை இடையே பகலில் இயக்கப்படும் வைகை விரைவு ரயிலின் பயண நேரம் 15 நிமிடம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து மதுரைக்கு பகல் நேரத்தில் அதிவிரைவுடன் குறைந்த கட்டணத்தில் இயக்கப்படும் ரயிலாக வைகை விரைவு ரயில் உள்ளது. கடந்த 46 ஆண்டுகளாக தென் மாவட்ட மக்களின் ரயில் பயணத்தில் வைகை விரைவு ரயில் பேருதவியாக இருக்கிறது.*





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.10.2023) நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 96–வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா,துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி முருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவாஜி கணேசன் அவர்களின் மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு குடும்பத்தினர், திரைப்பட நடிகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அக்.2- காந்தி ஜெயந்தி நாளையொட்டி - 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் மையக் கருத்தின்படி - இன்று

# தமிழ்நாட்டில் - 12,525 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - காணொலிக் காட்சி வாயிலாக உரையாற்றுகிறார்!

**சென்னை, அக்.2 -**

**தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி அக். 2 அன்று 12,525 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது. இக்கூட்டங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக உரையாற்றுகிறார்.**

அதன் விபரம் வருமாறு :

மக்களதிகாரத்திற்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் கிராம ஊரட்சிகளில் ஆண்டுதோறும் நடைபெறும் 4 கிராம சபைக் கூட்டங்கள் என்பதை 6 ஆக உயர்த்தி அரசாணையிட்டு கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறுவது உறுதி செய்யப்படுகிறது.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்றுரைத்த உத்தமர் காந்தியடிகளின் பிறந்ததினமான அக்டோபர் 2ஆம் நாளில் நடைபெற உள்ள கிராமசபைக் கூட்டங்களில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ளும் வகையில் அனைத்து கிராம ஊராட்சிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டங்களில் பொதுமக்கள் அதிக அளவில் கலந்து கொள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திடும் வகையில் கிராமசபைக் கூட்ட அழைப்பிதழ் ஒன்று வடிவமைக்கப்பட்டு ஊரக வாழ் பொது மக்களுக்கு இல்லம் தோறும் வழங்கப்பட்டுள்ளது.

"எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்" என்கிற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வரிகளுக்கிணங்கவும், முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி "அனைவரையும் உள்ளடக்கிய, பொறுப்புள்ள மக்கள் நலனை மையமாகக் கொண்ட உள்ளாட்சி நிர்வாகத்தினை நோக்கிய இந்த கிராம சபையின் கருப்பொருளாக "எல்லார்க்கும் எல்லாம்" என்கிற மையக்கருத்தின்படி நடத்தப்படவுள்ளது.

இவ்வழைப்பிதழ் கிராமசபைக் கூட்டத்திற்கான கருப்பொருளான "எல்லார்க்கும் எல்லாம்" எனும் மைய கருத்துடன் அரசு செயல்படுத்தும் அனைத்து முன்மாதிரி திட்டங்கள் மூலம் பயன்பெற்றோர் விவரம், கிராம ஊராட்சியின் வரவு செலவு கணக்கு விவரங்கள், ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் / பணிகள் மற்றும் அதனால் பயன்பெறும் பயனாளிகள் ஆகியன அடங்கிய கையடக்க விழிப்புணர்வு பிரதிகள் மூலம் அனைத்து வீடுகளுக்கும் விநியோகிக்கப்பட உள்ளது.

இவ்வரசின் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் முத்தான திட்டங்களான விடியல் பயணம்– மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து சேவை, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஆகியவை குறித்து பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் விதமாக திட்டசெயலாக்கம், பயனாளிகள் தேர்வு விவரம், திட்டத்தின் பயன்கள் குறித்து குறும்படங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் காட்சிப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிராமசபை கூட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி குறும்பட உரையின் மூலம் 2.10.2023 அன்று துவக்கி, கிராம சபை குறித்த கருத்துக்களைத் தெரிவித்திட உள்ளார்கள். மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தொடர்புடைய மாவட்டங்களில் நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கிராமசபைக் கூட்டத்திற்கான உத்தேசப் பொருட்கள் அடங்கிய வழிகாட்டுதல்கள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக கிராம ஊராட்சிகளுக்கு அனுப்ப ப்பட்டுள்ளது. இதில், பொதுவான விவாதப் பொருட்களாக, ஊராட்சிகளின் நிதி நிலை அறிக்கை, டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு, மழைநீர் சேரிப்பு, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் திட்டம், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, பிரதமமந்திரி ஊரக குடியிருப்பு திட்டம், மக்கள் திட்டமிடல் இயக்கம் மற்றும் இதர பொருட்களுடன் விவாதம் நடைபெற உள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளம்

# "நடிகர் திலகம்" சிவாஜியின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக். 2-

**'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் அவர்களின் 96-வது பிறந்தநாளை யொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், நடிப்பின் இமயமாய், தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளமாய் என்றென்றும் உயர்ந்து நிற்கும் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் அவர்களின் புகழ் தரணி உள்ளவரை நிலைத்திருக்கும் என புகழாரம் சூட்டியுள்ளார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நடிகர் திலகம்" சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞரின் கனல் தெறிக்கும் வசனங்களை அனல் பறக்கத் தமது சிம்மக் குரலால் பேசி, ரசிகர் நெஞ்சங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்த "நடிகர் திலகம்" அவர்களின் 96-ஆவது பிறந்தநாள் இன்று!

நடிப்பின் இமயமாய், தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளமாய் என்றென்றும் உயர்ந்து நிற்கும் "நடிகர் திலகம்" சிவாஜி கணேசன் அவர்களின் புகழ், தரணியும், தமிழும் உள்ளவரை என்றென்றும் நிலைத்திருக்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழினத் தலைவர்
# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (5)
## அக்டோபர் 4 புதன்கிழமை வெளிவருகிறது !



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று " முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 4 சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**அக்டோபர் 2 - திங்கள் கிழமை, அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாள் என்பதால், அன்று முரசொலிக்கு விடுமுறை.**

**எனவே அக்டோபர் 4, புதன்கிழமை அன்று, முரசொலி சிறப்பிதழ்(5), "தமிழ்த் திரை உலகத்தின் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டத்தில்

# மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கிய முதல்வருக்கு நன்றி!

திருவள்ளூர், அக்.2-

திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு கூட்டம் மாவட்ட திட்ட குழு தலைவரும் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவருமான கே.வி.ஜி.உமாமகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

இதில் துணைத் தலைவர் கொத்தியம்பாக்கம் டி.தேசிங்கு, மாவட்ட ஊராட்சி செயலர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட கவுன்சிலர்கள் சரஸ்வதி சந்திரசேகர், சிவசங்கரி உதயகுமார், இந்திராபொன்குணசேகர், மோரை மு.சதீஷ்குமார், டி.தென்னவன், விஜயகுமாரி சரவணன், ஆர்.டி.இ.உதயசூரியன், சு.சக்திவேல், கோ.சுதாகர், கீதா அரசு, சாரதாம்மாள் முத்துசாமி, தேசராணி தேசப்பன், உட்பட கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டு தங்கள் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என தெரிவித்தார்கள்.

கூட்டம் நிறைவாக மகளிர்களுக்கு 1000/உரிமை தொகை வழங்கியதற்கும் பிப்ரவரி 1ஆம்தேதி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் பள்ளி கட்டிடங்கள் அடிக்கல் நாட்டப்பட்டு 8 மாத காலத்தில் முடிக்கப்பட்டு முதற்கட்டமாக ஆயிரம் பள்ளிகளை திறந்து வைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நீலகிரி–குன்னூரில் சுற்றுலாப் பேருந்து விபத்து – 9 பேர் பலி!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல்!

## விபத்தில் காயமுற்றோர் விரைவில் குணமடைய விழைந்து - 'ட்விட்டர்' பதிவு!

**சென்னை, அக்.2**

**நீலகிரி மாவட்டம் - குன்னூரில் சுற்றுலாப் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் 9 பேர் இறந்தது குறித்து தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, 'ட்விட்டரில்' இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

அவரது 'ட்விட்டர்' பதிவு வருமாறு:-

நீலகிரி மாவட்டம் - குன்னூரில் சுற்றுலாப் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தது அதிர்ச்சியையும், மனவேதனையையும் தருகிறது. விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கல்கள். அவர்கள் மறைவால் வாடும் குடும்பத்தினர், நண்பர்களுக்கு என்னுடைய ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

விபத்தில் காயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அனைவரும் விரைவில் குணமடைய வேண்டுமென விரும்புகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# மகளிர் இடஒதுக்கீடு; பா.ஜ.க.வின் ஏமாற்று வேலை!

## ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேட்டி!



சிவகங்கை, அக். 2 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் ஒன்றியநிதிஅமைச்சர் ப.சிதம்பரம்எம்.பி.செய்தியாளர்களிடம் கூறியதாவது.

காரைக்குடியில் முதல்வரால்அறிவிக்கப்பட்டசட்டகல்லூரிக்கான ஒப்பந்த காரைதேர்வுசெய்யும்பணி முடிவடையும் நிலையில் உள்ளது. விரைவில் கட்டிடப் பணிகள் துவங்கும். இந்த கல்லூரியில் 75 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்இதில்54பேர்மாணவிகள் என்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பெண்கள்சட்டக்கல்வியை ஆர்வத்துடன் படிக்க வருவதுவரவேற்கத்தக்கதாகும்.

சமீபத்தில் கூடிய நாடாளுமன்றத்தில் மகளிர்க்கு 33 சதவீத இட ஒதுக்கீடு இன்று பா.ஜ.க. கூறிய சட்டம் கொண்டு வந்தது ஏமாற்று வேலை. இதற்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல்அளித்ததுவரவேற்கத்தக்கது . ஆனால் இந்த சட்டம் மசோதா வாக உள்ளதே தவிரஅமலுக்குவரவாய்ப்பு இல்லை.முன்னாள்பிரதமர் தேவகவுடா 1996 இல் மகளிர்சட்டமசோதாகொண்டு வந்தார்.

பிறகு வாஜ்பாய் முயற்சி எடுத்தும்அதுநிறைவேற்றப் படவில்லை. 2010ல் மன்மோகன் சிங் நிறைவேற்றினார்.1996,1999,2000,2010, ஆண்டுகளில்கொண்டுவரப்பட்ட இந்த மகளிர் மசோதாவில் எந்த வேறுபாடும் கிடையாது. அதே மசோதா அதே வரைவினை சட்டத்தினைபி.ஜே.பி.அரசுஅமுல் படுத்தியிருந்தால் அல்லது குடியரசுத்தலைர் ஒப்புதல் அளித்தி ருந்தால் 2024 தேர்தலில்இந்தசட்டம்நடைமுறைக்கு வந்திருக்கும்.

ஆனால் பா.ஜ.க. அரசு விஷமத்தனமாகவேண்டும் என்றே இதில் பல்வேறு தடைக்கற்களை வைத்துள்ளது. அதில் முக்கியமாக மக்கள் தொகை கணக்கெடுப்பும் அதன் பிறகு தொகுதி மறுவரையும் ஆகும்.

இந்தகணக்கின்படி2024, 2029 தேர்தல் களில் இந்த மசோதா அமலுக்கு வராது. இந்த மசோதா மீது பா.ஜ.க அரசுக்குநம்பிக்கைஇல்லை. தேர்தலுக்காக இதை கொண்டுவந்துள்ளது.அ.தி.மு.க. பா.ஜ.க.வை விட்டு வெளியேறுவது மகிழ்ச்சி. பா.ஜ.க. அரசு நாடாளுமன்ற தேர்தல் வருவதால் டீசல்பெட்ரோல்,விலையை குறைப்பார்கள். சேமிப்பு கணக்கு வட்டியை உயர்த்துவார்கள்.

ஏந்தக்காளிவெங்காயம் விலையை கூட குறைப்பார்கள்.நடைபெறஉள்ளபாராளுமன்றதேர்தலில்இந்தியா கூட்டணி சார்பில் 10 ஆண்டுகளில் பா.ஜ.க. ஆட்சியில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, இந்து முஸ்லிம் பகைமை, மணிப்பூர் கலவரம் குறித்து மக்களிடம் விளக்கிவாக்குகேட்போம். இந்தியாகூட்டணிநாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. முதல்வர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஒரு கோடியே6லட்சத்து50ஆயிரம் பேருக்கு கொடுப்பது வரவேற்கத்தக்கது. பாராட்டுக்குரியது. இதில் விடுபட்டுள்ள15லட்சம்பேருக்கும் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இது மிக சிறப்பான திட்டம். அதுதவிர அரசு பேருந்துகளில் பெண்களுக்கான இலவசபயணம்,காலைசிற்றுண்டி திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கதாகும்பாராட்டுக்குரியதாகும்.

இவ்வாறு ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.

பேட்டியின் போது எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி ஆகியோர் இருந்தார்கள்.

அனைத்து கட்டுமானப் பணிகளும் நிறைவுறும் நிலையில் உள்ளது!

# நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் - விரைவில் சோதனை ஓட்டம்!

## நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தகவல்!



சென்னை, அக்.01-

நெம்மேலியில் அமைக்கப்பட்டு வரும் - நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் அனைத்து கட்டுமானப் பணிகளும் நிறைவு செய்யப்படும் தருவாயில் உள்ளது எனவும், விரைவில் சோதனை ஓட்டம் தொடங்கப்படும் எனவும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

நகராட்சி நிருவாகத் துறைஅமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் நேற்று (30.09.2023) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் நெம்மேலியில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் நிறைவு கட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர், அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

பருவமழை பொய்க்கும் காலங்களில் நகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசு கடல்நீரை குடிநீராகும் நிலையங்களை அமைத்துள்ளது.

அதனடிப்படையில், முதன்முதலாக தமிழ்நாட்டில் மீஞ்சூர் காட்டுப்பள்ளியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில், 23.02.2010 அன்று நெம்மேலியில் அன்றைய துணை முதலமைச்சரான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.805 கோடியே 8 லட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டாவது கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். இப்பணிகள் முடிக்கப்பட்டு தற்போது சுமார் 10 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளது.

கடல்சார் பணிகள், இயந்திரவியல் மற்றும் மின்சாரம் கருவிகள் நிறுவும் பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளது. மேலும், கடல்நீரை நிலையத்திற்கு உள் கொணரும் குழாய் மற்றும் நிராகரிக்கப்பட்ட உவர்நீரை கடலுக்கு வெளியேற்றும் குழாய் (Offshore works; Intake and Outfall Pipeline works), கடல்நீரை உள் வாங்கும் ஆழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (Seawater Intake Sump) காற்றழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை அகற்றும் தொட்டி (Dissolved Air Flotation), வடிகட்டப்பட்ட கடல் நீர்த் தேக்கத் தொட்டி (Clarified Water Tank), வடிகட்டப்பட்ட கடல்நீர் உந்து நிலையம் (Clarified Water Pumping Station) என இந்நிலையத்தில் மொத்தம் உள்ள 23 அலகுகளில் அனைத்து பணிகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

மேலும், கடல்சார் பணிகளின் ஒரு பகுதியாக, 2250 மிமீ விட்டமுள்ள 1035 மீட்டர் நீளமுள்ள கடல்நீரை உட்கொள்ளும் குழாயில், 835 மீட்டர் நீளத்திற்கு குழாய் கடலில் பதிக்கும் பணி நிறைவடைந்துள்ளது, மேலும் மீதமுள்ள 200 மீட்டர் நீளத்திற்கு கடல்நீரை உட்கொள்ளும் குழாய் பதிக்கும் பணிகளுக்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது. இக்குழாய் அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்திற்குள் கடலில் பதிக்கப்படும். இதுவே இந்தியாவின் மிகப்பெரிய கடல்நீரை உட்கொள்ளும் குழாய் ஆகும். மேலும், நிராகரிக்கப்பட்ட உவர்நீர் வெளியேற்றும் 1600 மிமீ விட்டமுள்ள 636 மீட்டர் நீளமுள்ள குழாயில் 600 மீட்டர் நீளத்திற்கு குழாய் கடலுக்கடியில் பதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை, பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு, 48.10 கி.மீ நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் சோழிங்கநல்லூரில் இடைநிலை நீரேற்று நிலையம் அமைப்பதற்கான அனைத்து கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர், தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனிததோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம் புழுதிவாக்கம், மடிப்பாக்கம். தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை(OMR)ல் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

இந்நிலையத்தின் இயக்குதலுக்கான ஒப்புதல் (Consent to operate) தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் அனைத்து கட்டுமானப் பணிகளும் நிறைவு செய்யப்படும் தருவாயில் உள்ளது. விரைவில் சோதனை ஓட்டம் தொடங்கப்படும்.

இவ்வாறு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.ஆர்.ராகுல் நாத், தலைமைப் பொறியாளர் ஆர்.கந்தசாமி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விடுமுறை

உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று (2.10.2023 – திங்கள்கிழமை) விடுமுறை!

'முரசொலி'யின் அடுத்த இதழ், வழக்கம் போல் **4.10.2023 - புதன்கிழமை** அன்று வெளிவரும்.

**- நிர்வாகி**

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்!

# மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் - பாக முகவர்கள் கூட்டம்!

## க.செல்வம் எம்.பி.- டி.செம்பருத்தி துர்கேஷ் பங்கேற்பு! பி.எச்.சத்தியசாய் அறிக்கை!

மதுராந்தகம், அக். 2 -

மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் - பாக முகவர்கள் கூட்டம் நாளை நடைபெறுகிறது என ஒன்றியச் செய லாளர் பி.எச். சத்தியசாய் அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பாக முகவர்கள் மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (3.10.2023) செவ்வாய் பகல் 2 மணிக்கு சாலவாக்கம் கூட்ரோடு ராசி மகாலில் ஒன்றிய அவைத் தலைவர் எம்.எஸ்.ஆறுமுகம் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் எஸ்.தனசேகர், ஆர்.தமிழரசன், டி.சித்ரா திருஞானச்செல்வன், எஸ்.தேவராஜ், கே.எஸ்.மணியன், கே.பார்த்தசாரதி, சி.சுந்தர வரதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி. மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் டி.செம்பருத்தி துர்கேஷ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் ஜே.யோகானந்த், கே.மணிகண்டன், இ.தினேஷ், டி.பக்தன் அருள்ராஜ், டி.ஜான்ராஜா சத்தியகுமார், சி.ஜானகிராமன், கே.பாபு மனோகரன், பி. கற்பகம் பாஸ்கர், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் : கே.ஸ்ரீமதி, எஸ்.பரமானந்தம், எஸ்.ஒப்பில்லால், என்.பத்மபிரியா, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கனிஜே.லிங்கேஸ்வரன், சசிகுமார். பி. லோகேஷ்குமார், ஏ. காமேஷ், ரானவர் ஜனனி, எஸ்.ரஞ்சித். கே.பிரகாஷ், ஜி.யாதவகுமார். க. குணசீலன். எஸ்.சீனிவாசன், தெய்வசிகாமணி, பழனி, வி.இ. வெங்கடேசன், யசயர் : ஈ.சண்முகம், ஹரிதாஸ், ஏ.அழகேசன். கே.கண்ணாயிரம், டி.அருள், எம்.பி. பிரபு, எம்.எஸ்.கோபி, ஆர். ரமேஷ். புருஷோத்தம்மன், எஸ்.மணிகண்டன். வி. தியாகு, ஆர்.ஜெயபிரகாஷ். கண்ணன், வி.மணி. பி.எம். குணா, இளையராஜா, வேதகிரி, என்.வனிதா நாராயணன், சி.அஜிதா சார்லஸ், ஆர்.ருத்ரா ராஜேந்திரன், தமிழ்ச்செல்வி, டி.அருண்குமார், மு.கணேஷ் குமார், கே. கபில்தேவ்,

ஊராட்சி மன்ற தலைவர்கள் டி.சித்ரா, ஆர்.வசந்திரவி, ஏசி.சுரேஷ், ஆர்.சந்திரபாபு, எம்.எம்.காம்ராஜ், கே.கண்ணன், எம்.ஜோதி முருகானந்தம், சின்யபைப்பையன், அற்புதம் கமலக்கண்ணன். அனிதா நாகராஜ் கிளை செயலாளர்கள் எம். கமலக்கண்ணன், இ.ராஜா, இ.வெங்கடேசன். ஏ.பாபு, எஸ்.சீனிவாசன், ஜி.வெங்கடேசன், எஸ்.மணிகண்டன். தங்கபாண்டியன் ஜெ. கோவிந்தன், உ.தியாக ராஜன். ஜி. தணிகா சலம், எஸ்.கே.சீனிவாசன், கே.சீனிவாசன் பின்வாய் என்.பி.சம்பத், எஸ். பலராமன், ஆறுமுகம், வி. சேட்டு, எம்.செல்வம், சி. முருகன், எஸ்.பாலமுருகன், முகமது பக்ருதீன், ஜி.சுப்பிரமணி, பாப்பம் : கே.ஏ. ரவிந்திரன், கே.மாரியப்பன், கே.ரமேஷ், கே.குணசீலன், தேவராஜ், சங்கர், சதீஷ்,பாஸ்கர், : வி.கவியரசன், எஸ்பி. ஆறுமுகம், பி.கன்னியப்பன், ஜெ.கணேசன், பிரபு, சுப்பிரமணி, குப்பன். கணேசன். சரவணன். சிவப்பிரகாசம் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் துர்கேஷ் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை யொட்டி பாக முகவர்கள் ஆலோசனை, கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் ஒன்றியச் செயலாளர் பி.எச்.சத்யசாய் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி தலைமையில்

# 99வது வார்டில் கொசு ஒழிப்பு - தூய்மைப் பணிகள் - மருத்துவ முகாம்!

## சி.சேகர் – ஆர்.எம்.ரங்கநாதன் முன்னிலை!

சென்னை, அக். 2-

எழும்பூர்தொகுதி99வது வார்டு காய்ச்சல்தடுப்பு நடவடிக்கையை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டணமில்லா மருத்துவ முகாம் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின்அவர்களின் ஆணைக்கிணங்க இந்துசமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலுடன்சென்னைமாநகராட்சி நியமனக் குழு உறுப்பினர் 78வது மாமன்ற உறுப்பினர் எழும்பூர்வடக்குபகுதிசெயலாளர் சொ.வேலு ஆலோசனையின்படி 99வது வார்டு மாநகராட்சிமாமன்றஉறுப்பினர் பரிதி இளம் சூருதி - தலைமையில்99-(அ)வட்ட செயலாளர்சி.சேகர், 99வது வட்டச் செயலாளர் ஆர். எம்.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில்மருத்துவமுகாம், கொசு ஒழிப்பு பணிகள்,தூய்மைபணிகள்நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மண்டலம் - ச.சுகாதார அலுவலர் மருத்துவர் ஷீலா சுகாதார அலுவலர்விஜயகுமார்,சுகாதார அலுவலர் 99வார்டு - சதீஷ்,99வதுவார்டுதுப்புரவு ஆய்வாளர்கிருஷ்ணமூர்த்தி, மேஸ்திரி கிருபா, பி.குமார், ஏசுதானம், ஜி.மணிமாறன், மற்றும்ஊர்பொதுமக்களும் கலந்துகொண்டுபயன்பெற்றனர்.

சென்னை மெட்ரோ ரெயில் பணிகளால்

# வட சென்னையில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, அக்.2–

கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் பிரதான உந்து குழாயில் இணைப்புப் பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 4.10.2023 அன்று காலை 10.00 மணி முதல் 05.10.2023 காலை 10.00 மணி வரை மண்டலம்–4, 5, 6, 8 மற்றும் 9க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் பிரதான உந்து குழாய் இணைப்புப் பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 4.10.2023 அன்று காலை 10.00 மணி முதல் 5.10.2023 காலை 10.00 மணி வரை மண்டலம்–4 (தண்டையார்பேட்டை), மண்டலம்–5 (இராயபுரம்), மண்டலம்–6 (திரு.வி.க நகர்), மண்டலம்–8 (அண்ணா நகர்) மற்றும் மண்டலம்–9 (தேனாம்பேட்டை)க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.


மண்டலம்–4 (தண்டையார்பேட்டை)– பெரம்பூர், எருக்கஞ்சேரி, பழைய வண்ணாரப்பேட்டை. மண்டலம்–5 (இராயபுரம்) – ஜார்ஜ் டவுன், ஏழு கிணறு ரோடு, முத்தியால் பேட்டை, வால்டாக்ஸ் ரோடு, எழும்பூர், பூங்கா நகர், தம்புசெட்டி தெரு, கெங்கு ரெட்டி ரோடு, சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை. மண்டலம்–6 (திரு.வி.க. நகர்) –புளியந்தோப்பு, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு. மண்டலம்–8 (அண்ணா நகர்) –ஈ.வி.ஆர். சாலை, பிரான்சன் கார்டன், கெல்லீஸ், புரசைவாக்கம், கீழ்ப்பாக்கம். மண்டலம்–9 (தேனாம்பேட்டை) – திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, ஐஸ் ஹவுஸ், நுங்கம்பாக்கம்.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவுசெய்து கொள்ளலாம்.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்த வித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும் என்று சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

# கடலூர் கிழக்கு மாவட்ட செயல்வீரர்கள் - இளைஞர் அணி - மகளிர் - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட திமுக, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், செயலாளர்கள் கூட்டம் மற்றும் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (02.10.2023, திங்கட்கிழமை) காலை 11.30 மணியளவில், வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் து.தங்கராசு தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. 14.10.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி முன்னெடுக்கும் மகளிர் உரிமை மாநாடு சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறுவதை முன்னிட்டு.
2. நாடாளுமன்ற தேர்தல் பணிகள் சம்மந்தமாக.
3. இல்லந்தோறும் இளைஞரணி மற்றும் சேலம் இரண்டாவது மாநில மாநாடு குறித்து.
4. கழக ஆக்கப்பணிகள்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர்,
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.


கலைஞர் 100
1924 - 2023
சென்னை தெற்கு மாவட்ட
வர்த்தகர் அணி சார்பில்
முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞரின்
நூற்றாண்டு விழா முன்னிட்டு
திருச்சி லோகநாதன் தியாகராஜன்
குழுவினர் வழங்கும்
கலைஞர் திரையிசை மழை
நிகழ்ச்சியை துவங்கி வைத்து சிறப்புரை
மாண்புமிகு,
மா.சுப்பிரமணியன் B.A.,L.L.B.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
திரு.கவிஞர் காசிமுத்துமாணிக்கம்
வர்த்தகர் அணி - மாநில செயலாளர்
திருமிகு.காரம்பாக்கம் க.கணபதி MLA
மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர்,மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர்
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைகழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர்
திரு.லயன் எஸ் அரவிந்த் ரமேஷ் M.L.A
சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்,சோழிங்கநல்லூர் மத்தியப் பகுதி செயலாளர்
திரு.A.M.V.பிரபாகர் ராஜா M.L.A
விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
திரு.கொளம்பூர்.வே.ராஜன் M.A.,MC
வளசரவாக்கம் 11 மண்டல குழு தலைவர்,மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர்
திரு.அய்பாக்கம்.அ.ம.துரைவீரமணி
வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர்,அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்
மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள்
மாமன்ற உறுப்பினர்கள்,கழக முன்னோடிகள் செயல்வீரர்கள்
அனைவரையும் வருக! வருக!! என
அன்புடன் வரவேற்கும்
இராமாபுரம் அ.விஜயபாலா MBA.,LLB.,
சென்னை தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர்
நாள்: 02.10.2023,
திங்கட்கிழமை,
மாலை: 5.00 மணிக்கு
இடம்: கிருஷ்ணவேணி
திருமண மண்டபம்,
ஆற்காடுசாலை, போரூர்
சென்னை தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி


சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி
துறைமுகம் மேற்குப் பகுதி துணைச் செயலாளர்,
59 வது வார்டு மாமன்ற உறுப்பினர்
திருமதி. K.சரஸ்வதி MC அவர்களின்
(வயது 58)
16-ம் நினைவு நாள்
படத்திறப்பு நிகழ்வு
நாள் : 02.10.2023 திங்கட்கிழமை நேரம் : மாலை 7.00 மணியளவில்
இடம் : எண்.110/58, பங்காரு நாயக்கன் தெரு. திருவல்லிக்கேணி, சென்னை - 05.
தலைமை
சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன்
செயலாளர் - 59 (அ) வட்டம்
டி.சதீஷ்குமார்
செயலாளர் - 59வது வட்டம்
முன்னிலை
எஸ்.முரளி
துறைமுகம் (மே) பகுதி செயலாளர்
எஸ்.இராஜசேகர்
துறைமுகம் (கி) பகுதி செயலாளர்
படத்தை திறந்து வைத்து இரங்கல் உரை
மாண்புமிகு. பி.கே.சேகர்பாபு MLA
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
அமைச்சர் - இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
மாண்புமிகு. தயாநிதி மாறன் MP
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்,
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்.
வணக்கத்திற்குரிய மேயர் பிரியா ராஜன்
சென்னை பெருநகர மாநகராட்சி
வணக்கத்திற்குரிய துணை மேயர் G.மகேஷ்குமார்
சென்னை பெருநகர மாநகராட்சி
பி.ஶ்ரீராமுலு MC
5-வது மண்டலக் குழுத் தலைவர்
எஸ்.மதன்மோகன் MC
9-வது மண்டலக் குழுத் தலைவர்
மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள்,
மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள்
அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் & துணை அமைப்பாளர்கள்
கழக கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள்...
....குடும்பத்தினர்....
H.கருணாநிதி K.சூரியபிரகாஷ் - சாய்னா
பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்
S.துர்கா தேவி -சுரேஷ்குமார்
59, 59 அ வட்ட தி.மு.க - துறைமுகம் மேற்குப் பகுதி, சென்னை கிழக்கு மாவட்டம்

வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்வு!

# விலையேற்றத்தை உடனே திரும்பப் பெறுக!

## ஒன்றிய அரசுக்கு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, அக்.2-**

**வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலையை உயர்த்தியுள்ள ஒன்றிய அரசை வன்மையாகக் கண்டித்துள்ள இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இந்த விலையேற்றத்தை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும்!" என வலியுறுத்தியுள்ளார்.**



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 'ட்விட்டர்' பதிவு வருமாறு :-

வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலையை ரூ.203 கூடுதலாக ஒன்றிய அரசு உயர்த்தியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த விலையேற்றம், உணவகங்கள் தேநீர்க் கடைகள் வைத்திருப்போர் என சிறு வணிகர்களை பெரிதும் பாதிப்படையச் செய்யும்.

ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரச் கொள்கையாலும் முறைப்படுத்தப்படாத ஜி.எஸ்.டி. பணமதிப்பு நீக்கம் கொரோனா ஊரடங்கு உள்ளிட்ட பிரச்சினைகளாலும் நொடிந்திருந்த சிறு வணிகர்கள் மீது மேலும் ஒரு தாக்குதலாக இந்த விலையேற்றம் அமைந்துள்ளது.

இந்த விலையேற்றத்தை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, அமைச்சர் தா.மோ.அன்பரசன், ஈரோடு இறைவன் சிறப்புரை !

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் !

## வே.கருணாநிதி தலைமை ! இ.கருணாநிதி எம்.எல்.ஏ.- எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*சென்னை, அக்.2*

*காஞ்சி வடக்கு மாவட்டம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் (இன்று 2.10.2023 திங்கட்கிழமை) மாலை 5 மணியளவில் நாகல்கேணி, பேருந்து நிலையம், போலீஸ் பூத் அருகில் நடைபெறுகிறது.*

*இம்மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளரும், மண்டல குழு தலைவருமான வே.கருணாநிதி தலைமை ஏற்கிறார்.*

*பேராசிரியர் எல்.பிரபு ப.காளேஸ்வரன், ஆர். உமாசங்கர், என். பன்னீர் செல்வம், பா. கவிதா, பா. டில்லி, பி.ஜே.வேந்தன், என்.கே.ரவிச்சந்திரன், இரா.கந்தவேலு, ஆர். கோகுல், சு.மனோகரன், க.சம்பத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*வட்டக் கழக செயலாளர் பி.ஸ்ரீதரன், சத்யா மதியழகன் எம்.சி. ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழகப் பொருளாளர், நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாநில இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி சிறப்புரை யாற்றுகின்றனர்.*

*இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்த குமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன், தலைமை கழக பேச்சாளர் முகமது இப்ராகிம், பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக் குமார், தலைமை பொதுக் குழு உறுப்பினர் எஸ்.சதீஷ், மாநகரக் கழக துணை செயலாளர் இரா.நரேஷ் கண்ணா, எஸ்.கே.நெப்போலியன், வி.ரவிச்சந்திரன், சத்திய பிரபு, ஏ.மதினா பேகம் எம்.சி., கல்யாணி டில்லி எம்.சி., வட்டச் செயலாளர் மு.இன்பசேகர் எம்.சி., ரம்யா சத்திய பிரபு எம்.சி.,*

*வட்டக் கழக செயலாளர்கள் என்.காந்தி, அண்ணா வெங்கடேசன், வி.எஸ். ஜெகநாதன், எச். முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன் உள்ளிட்ட மாவட்ட பகுதி வட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.*

*பம்மல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் துரை இளங்கோவன் நன்றி கூறுகிறார்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.வினர் செய்துள்ளனர்.*










கோயம்புத்தூர் மாநகராட்சி, வார்டு எண்3 சின்ன வேடபட்டியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை டெங்கு மற்றும் மழைக்கால நோய்களுக்கான சிறப்பு காய்ச்சல் மருத்துவ முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி மாநகராட்சி ஆணையாளர் (பொ) திருமதி செல்வ சுரபி, மாநகராட்சி துணை மேயர் வெற்றிச்செல்வன், மாநகராட்சி உதவி ஆணையர் வடக்கு நூர் அகமது, வடக்கு மண்டல குழு தலைவர் கதிர்வேல், துணை இயக்குனர் மருத்துவ பணிகள் மரு.அருணா, மாநகர நகர் நல அலுவலர் பொறுப்பு வசந்த் திவாகர், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி கவிதா சிவா ஆகியோர் உள்ளனர்.

### திருவொற்றியூரில்

## பள்ளி மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### கழக மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவொற்றியூர், அக்.2

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு உதவி பெறும் தூய பவுல் மகாஜன மேல்நிலைப் பள்ளி மற்றும் ஸ்ரீ வி.ராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளியில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவ-மாணவியருக்கு திராவிட மாடல் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநில இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிக்காட்டுதலின்படி தமிழ்நாடு அரசின் விலை இல்லா மிதிவண்டியை 48 மாணவர்களுக்கும், 44 கழக மாநில மீனவர் அணி துணை தலைவர் திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

திருவொற்றியூர் தூய பவுல் மகாஜன மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை ராக் சின்னப்பா பள்ளியின் தலைமை ஆசிரியர் மார்ட்டின் சகாயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து வடக்கு ரயில்வே சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வி.ராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 33 மாணவ - மாணவியர்களுக்கும் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டியை வழங்கி கல்வியின் அவசியத்தையும், மாணவர்கள் ஒழுக்கமாக கல்வி பயில வேண்டும் என பல அறிவுரைகளையும் கூறினார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினரும், ஜெயகோபால் கரடியா அரசு மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவருமான வி.இராம நாதன், மாமன்ற உறுப்பினர்கள் கவி.கணேசன், கே.பி.சொக்கலிங்கம் பானுமதி சந்தர், மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம், மு.பகுதி துணை செயலாளர் இ.ரமேஷ், வட்ட கழக செயலாளர் ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ், எத்திராஜ், சந்தான கிருஷ்ணன்,

மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்.டி.சங்கர், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பாலஉமாபதி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பிரிட் சுரேஷ், தனசேகர், பகுதி பிரதிநிதி வாழப்பாடி செந்தில், பகுதி மீனவரணி அமைப்பாளர் எஸ்.செல்வம், எஸ்.கே.இளங்கோ, எம்.எல்.வேலன், ஆர்.குமரன், கே.எஸ்.ஆனந்தன், கருணாநிதி, பரணி குமார், முத்துராஜ், வி.ஏ.டி. செந்தில், இளைஞரணி கார்த்திக், ராஜா, குமார், நன் நாகராஜ், திருவொற்றியூல் மேற்கு பகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.நிர்மல் தாஸ் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக தோழர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

### குவைத் தளபதி பேரவை சார்பில்

## கழக முப்பெரும் விழா - விருதுகள் வழங்கல்!

### மருத்துவர் சாந்தமூர்த்தி - சரவணன் - காளிதாசன் பங்கேற்பு!

குவைத், அக். 02-

அயலக திராவிட முன்னேற்ற கழகம், குவைத் தளபதி பேரவை சார்பில் கழகத்தின் முப்பெரும் விழா, முருகாப் பாலிவுட் உணவகத்தில் கழகத்தின் மூத்த உடன்பிறப்புகளுக்கும், சிறந்த சமூக சேவகருக்கும், சிறந்த மருத்துவ சேவைக்கான விருதும் வழங்கப்பட்ட திருவாளர்கள் முகமது ஹக்கீம், கடியாவயல் கருப்பையா, பழனி நல்லரசு, சரவணராஜ், குடந்தை முகமது ரபிக், வேணாடு பெர்வின் சுதர், தமிழ் மக்கள் சேவை மையம் அலிபாய், டேவிட் திவாகர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

நிகழ்வில் தலைமை அவைத் தலைவர் மருத்துவர் சாந்த மூர்த்தி, ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன் ஒருங்கிணைப்பில் முன்னிலை துணைப் பொருளாளர் காளிதாசன், தொண்டரணி, தொழிலாளர் அணி செயலாளர்புல்லட் ராமதாஸ், ஆறாம் பண்ணை ஷேக், மண்டலம் மதிவாணன், உ.கு. சிவக்குமார், கடியா வயல் கருப்பையா, ஷேக் கான் நபீஸ், மதிமுக மணி வாசகம், சமூக ஆர்வலர் முகமது, உதயநிதி ரசிகர் மன்றம் ஈரோடு முஸ்தபா, கூட்டணி கட்சி நிர்வாகிகள் ம.தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், வி.சி.க., மா.ஜா.க., சி.பி.எம்., சி.பி.ஐ., தமிழ் மக்கள் சேவை மையம் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்ட உடன்பிறப்புகள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

நன்றி உரை காசி ராமலிங்கம் வருகை தந்த அனைவருக்கும் உணவு உபசரிப்புடன் விழா இனிதே நிறைவுற்றது.

### மயிலை த.வேலு தலைமை! ஜெ.கருணாநிதி கே.ஏழுமலை., நந்தனம் மதி., எஸ்.முரளி முன்னிலை!

## சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் அறிக்கை!

சென்னை, அக். 2

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (2.10.2023 - திங்கட் கிழமை) மாலை 6 மணிக்கு, மயிலை சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி., நந்தனம் மதி எம்.சி., எஸ்.முரளி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: டிசம்பர் 17 இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு குறித்தும், கழக அக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தெரிவித்துள்ளார்.

## சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை



சென்னை மேற்கு மாவட்ட திமுக அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் அண்ணா நகர் தொகுதி பார்வையாளர் காசி முத்துமாணிக்கம், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் கலை கதிரவன், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி பார்வையாளர் சி.எச்.சேகர் ஆகியோர் முன்னிலையில் இன்று (02-10-2023 திங்கள்கிழமை) காலை 10 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகம் அமைந்துள்ள என்:20/32, காம்தார் நகர் நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவு குறித்து மற்றும் கழக ஆக்க பணிகள்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



சூலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நேற்று கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, மாவட்ட அமைப்பாளர் ஞானசேகரன், துணை அமைப்பாளர்கள் வால்பாறை ரவிச்சந்திரன், சுல்தான்பேட்டை மணி, மோகன், பொள்ளாச்சி பஞ்சலிங்கம், மதுக்கரை அருள்ராஜ் உள்பட மலர் கலந்து கொண்டனர்

### பிரேமா சுரேஸ் எம்.சி. தலைமையில்

## 113வது வட்டத்தில் மருத்துவ முகாம்!

### கழகத்தினர் - பொதுமக்கள் பங்கேற்பு!

சென்னை, அக்.2

கழக தலைவர் தளபதி, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கினங்க மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் , கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோரின் ஆலோசனைப்படி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சிறப்பு மருத்துவ முகாம் ஆயிரம் விளக்கு கிழக்குபகுதி 113வது வட்டத்தில் திருமதி.பிரேமா சுரேஸ் எம்.சி. தலைமையில் இராமாதெரு மற்றும் மேல்பாடி தெரு சந்திப்பில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

இதில் மருத்துவர்கள், செவிலியர்கள் உதவியாளர்களுடன் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு பரிசோதனை செய்து அதற்கு தேவையான மருந்து மாத்திரைகள் பெற்று பயன் அடைந்தார்கள். இதில் வா.கணேசன், நுங்கை எஸ்.குணசேகர், நுங்கை தே.ஹரி, க. மோகன், நுங்கை பி.சிரிதர், செஞ்சி எஸ்.புருஷோத்தமன், எஸ்.பாலசுப்பிரமணி, வி.மதன், வி.விஜய், ஆர்.பார்த்திபன், வி.ஆனந்த்குமார், ஆர்.நவின் மற்றும் மகளிர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் சார்பாக ஊரெங்கும் பனைவிதை நடும் விழா நிகழ்வை அய்யப்பன் தாங்கல் ஊராட்குசியில் சிறு சிறு நடுத்தர நிறுவனங்கள் தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பனை விதையை நட்டு துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட துணை அமைப்பாளர் டி.எம்.உமா சங்கர் தலைமை தாங்கிட, காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.ஆர்.ஆனந்தன் வரவேற்றார். இந்நிகழ்வில்மாவட்டஊராட்சிக் குழுத்தலைவர்படப்பைஆ. மனோகரன், குன்றத்தூர்வடக்கு ஒன்றிய செயலாளர் வந்தேமாதரம், கே.எத்திராஜ், ஜெமிலா பாண்டுரங்கன், மாங்காடு நகர செயலாளர் எஸ்.ஜபருல்லா, துணைத் தலைவர் பா.பிரசாத், துணை அமைப்பாளர்கள் ஆ.ராஜன், சி.வாசிம்ராஜா ஆர். பெருமாள், ப.டேனியல் சந்துரு மற்றும் கழகத் தோழர்கள் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி:

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

### கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், அக்.02-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலுள்ள கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் 01.01. 2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்து டன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ் காணும் அட்டவணையின் படி அறிவித்துள்ளது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலுள்ள காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10. 2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூ டிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.



இதனடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இது வரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கி றேன். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 27. 10.2023 பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்ககால அவகாசம் -27.10.2023 முதல் 09.12.2023 வரை.

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05.11. 2023 மற்றும் 18, 19.11.2023

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் - 01.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சி மன்ற, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை த்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு க.சுந்தர் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



ஆவடி அடுத்த கண்ணம்பாளையம் பகுதியில் ( கால் பந்து கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக்கான தனியார் விளையாட்டு மைதானம் திறப்பு விழா ஆவடி மாநகராட்சி 45 வது வார்டு கழக செயலாளர் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து கிரிக்கெட் விளையாடினார். அருகில் முன்னாள் இந்தியா கால் பந்து வீரர் முகமது அம்ஜத், சென்னை கால்பந்து வீரர்கள் ரசிகர் மன்றம் சங்கம் யுவராஜ், மாநகர கழக பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழக செயலாளர் ஜி. நாராயணபிரசாந்த், ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், பகுதி கழக செயலாளர்கள் பேபிசேகர், பொன். விஜயன், கவுன்சிலர் சசிகலா ஆனந்த் உள்பட பலர் உள்ளனர்.

### ஆசிய விளையாட்டு போட்டி: ஆடவர் ஹாக்கியில்

## பாகிஸ்தானை வீழ்த்தியது இந்தியா!

ஹாங்சோ: அக். 2 -

19வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று (செப்.30, சனிக்கிழமை) காலை முதலே இந்திய வீரர்கள், வீராங்கனைகள் பல்வேறு விளையாட்டுகளில் மும்முரமாக பங்கேற்றனர். நேற்றைய ஆட்டத்தில் வென்றதன் மூலம் ஆசிய விளையாட்டு வரலாற்றில் முதல் முறையாக டேபிள் டென்னிஸ் பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவுக்கு பதக்கம் கிடைப்பது உறுதியாகி உள்ளது.

இதனிடையே ஆடவர் ஹாக்கி போட்டியில் பாகிஸ்தான் அணியை இந்திய அணி 102 என்ற கணக்கில் வீழ்த்தி அபார வெற்றிபெற்றது. ஆசிய விளையாட்டு போட்டியில் குரூப் ஏ பிரிவு இடம்பெற்றுள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் நேற்று லீக் ஆட்டத்தில் மோதின. இந்த போட்டியின் தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி கோல் மழை பொழிந்தது. முதல் பாதியில் 4 0 என்ற கணக்கில் கோல் மழை பொழிந்த இந்திய அணி, ஆட்டநேர முடிவில் பாகிஸ்தானை 102 என்ற கணக்கில் வென்று அபார வெற்றி பெற்றது. இதுவரை ஆடிய நான்கு போட்டிகளில் 46 கோல்கள் அடித்திருக்கிறது இந்திய அணி.

இந்தியாவுக்கு தங்கம் கிடைக்குமா என எதிர்பார்ப்பு எழுந்த நிலையில், கடைசி இரண்டு செட் போட்டிகளில் வெற்றி பெற்று இந்தியாவுக்கு தங்கப் பதக்கத்தை பெற்றுகொடுத்துள்ளார். இந்தப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற அபய் சிங் தமிழகத்தைச் சேர்ந்த வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

தடகளத்தில் மேலும் 2 பதக்கம்: இதேபோல் 10000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் கார்த்திக் குமார் (28:15.38) வெள்ளிப்பதக்கம் வென்றார். அதேபோல் குல்வீர் சிங் (28:17.21) வெண்கலப் பதக்கம் வென்று அசத்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சூலூர் எஸ்.எஸ்.பொன்முடி

### அக்டோபர் 2 (2012)



**மாவட்டக் கழக துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் கழகச் செயலாளர் என்ற பொறுப்புகளை வகித்து, சூலூர் பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**சூலூர் பேரூராட்சித் தலைவர், நிலவள வங்கித் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்,பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக மக்கள் பணியாற்றியவர்.**

**1986ஆம் ஆண்டு முதல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தாம்பரம் நகர முன்னாள் நகர மன்ற உறுப்பினரும் – வட்டக் கழகச் செயலாளருமான பி.பாரதி, உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள தகவலறிந்து நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவரும், கழகப் பொருளாருமான டி.ஆர்.பாலு அவர்கள் அவரது இல்லத்திற்குச் சென்று பாரதி அவர்களிடம் நலம் விசாரித்தார். உடன் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பகுதிக் கழகச் செயலாளர், மண்டலத் தலைவர் டி.காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# ஆதிதிராவிடர் நலக்குழு மத்திய மண்டலம் சார்பில் விழுப்புரத்தில் மாபெரும் பட்டிமன்றம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் அமைச்சர் க.பொன்முடி தொடங்கி வைத்தார்!

விழுப்புரம், அக்.2-

மாநில ஆதிதிராவிடர் நலக் குழு மற்றும் சிறுபான்மை நல உரிமைக்குழு பிரிவு மத்திய மண்டலம் சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பட்டிமன்ற போட்டி விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு அணிச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி சிறப்புரையாற்றி பட்டி மன்றத்தை துவக்கி வைத்தார்.

மாநில ஆதிதிராவிடர் நலக் குழு அணி இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரையாற்றினார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ, ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மருதூர் இராமலிங்கம், விபி.இராசன் திட்டப்பட்டி ஆறுச்சாமி மாரியப்பன் கென்னடி துரைசாமி, இராஜேந்திரன், விழுப்புரம் தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு அணி நிர்வாகிகள் தலைவர் வேலு ஜி , அமைப்பாளர் செல்வ பிரேம், துணைத் தலைவர் இருசப்பன் துணை அமைப்பாளர்கள் திராவிட மணி, தர்மலிங்கம், ராஜீவ் காந்தி, சூப்பர் பழனி , ஓம் சிவ சக்திவேல், ஏழுமலை, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் டி. என். ஏ. தமின், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பட்டிமன்றத்திற்கு நடுவராக திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களும், பேச்சாளர்களாக கவிஞர் இனியவன், பேராசிரியர் விஜயகுமார், திருமதி நாக நந்தினி, தணிகைவேலன் ஆகியோர் விவாத உரையாற்றினார்.' கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், அமைச்சர்கள் கே.எஸ். மஸ்தான், கயல்விழி செல்வராஜ், சி.வெ.கணேசன், மா. மதிவேந்தன், இரா.ஜனகராஜ், துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள்,வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 02/10/2023 திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ். சாலை, எம்.கே.டி.மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள்,பகுதிக் கழகச் செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்,வட்டக் கழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு அணி சார்பில் மாவட்ட அளவிலான வில்வித்தை போட்டி செங்கல்பட்டு பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு பரிசுகள் வழங்கினர். உடன் செல்வம் எம்.பி., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ. காஞ்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை மனோகரன் மற்றும் விளையாட்டு விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி.ஆர். சாரதி பெரியநாயகம் மற்றும் துணை அமைப்பாளர் தினேஷ் கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இராமாபுரம் அ.விஜயபாலா தலைமை! - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., காசி முத்துமாணிக்கம். முன்னிலை!

# சென்னை தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் கலைஞர் திரையிசை மழை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, அக்.2

சென்னை தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் திரையிசை மழை நிகழ்ச்சி இன்று (2.10. 2023 திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் போரூர், ஆற்காடு சாலை கிருஷ்ண வேணி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் இராமாபுரம் அ.விஜயபாலா தலைமை வகிக்கிறார்.

மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வ.செல்வகுமார் எம்.சி, வி.ராஜேஷ், ஆ.செல்வம், கே. ராஜீ எம்.சி, வ.சண்முகம், எம். எல்.நாதன், எஸ்.கர்ணன், ஜி.சேகர், சி.டேவிட்ராஜ், செஞ்சி கார்த்திக், இ.பிரகாசம், எஸ்.பூங்கொடி, எஸ்.ஜெகதீசன், எஸ்.பூபாலன், எஸ்.சேகர், ஏ.செல்வராஜ், இ.சீனிவாசன், ஏ.மணிவண்ணன், இ.இளங்கோவன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

திருச்சி லோகநாதன், தியாகராஜன் குழுவினர் வழங்கும் கலைஞர் திரையிசை மழை நிகழ்ச்சியை சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் லயன் எஸ். அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, எ.எம்.வி.பிரபாகர் ராஜா எம். எல்.ஏ, சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், க.தனசேகரன், நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி எஸ்.பத்மபிரியா, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், எஸ். பாஸ்கரன், கே.கண்ணன் எம். சி, மு.ராஜா எம்.சி, எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, இரா.துரைராஜ் எம்.சி, எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ.மதியழகன் எம்.சி, துரை கபிலன், அரிமா சு.சேகர், ஜி.வெங்கடேசன்,

எம்.ஸ்ரீதரன் எம்.சி, வீர. கனிமொழி, சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், எம். கே.ஏழுமலை, ப.ரவி, உ. துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், எஸ். டி.தங்கராஜன், ரா.பாலசு ந்தரம், ப.கிரிஜா, பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், தா. பஷீர், டி,ஜே.பாஸ்கர், கே.குமரேசன், வே.ஆனந்தன், ஏ.கே. ஆனந்த், எஸ்.தீபக், எம்.விநாயகமூர்த்தி, சைதை சாதிக், கழக த.ரமேஷ், தரமணி ஜெகதீசன், பா.அருண்குமார், டி.கனிமொழி, சி.பரிமேலழகன், சி. ரமேஷ், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், ஜி.வரதன், மருத்துவர் இரா.மு.முபாரக், எஸ்.பி.அருள், எம்.எஸ்.ஹரி பாபு, எம்.ஆர்.சசிகுமார், எஸ். முகேஷ், நிஷா சையத், எஸ். பாலமுருகன், ச.சங்கர்கணேஷ் எம்.சி, செ.ரவி, எம்.பி.செல்வராஜ், வே.மதியழகன், பால்பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி,

செல்விரமேஷ் எம்.சி, ஹேமலதா கணபதி எம்.சி, சாந்தி இராமலிங்கம் எம்.சி, ஆ.மாலினி எம்.சி. எம்.இ. ஸ்டாலின் எம்.சி, ரமணி மாதவன் எம்.சி, தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், என்.ரவி, கே.எஸ். மாறன்குமார், கே.சங்கர், கு. சதீஷ்குமார், இரா.வினோத், ஜெயசுதா, எம்.ஜி.சாமிநாதன், எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ், எஸ். ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன், மூன்லைட் டி.ரவி, க.கைலாசம், இரா.ராஜேந்திரன், கு.அருள், எஸ்.ரவி, எ.டி. எத்திராஜ், ஜி.ராமகிருஷ்ணன், எம்.கே.கமலக்கண்ணன், கோ.இராமலிங்கம், ஆர்.கர்ணல், க.பிருந்தாவனன், ஆர். ரசூல்தீன், ஆர்.ராகேஷ், ச. எழில்அரசு, கே.ராஜ்குமார், கே.முரளி, பி.சங்கர், எம்.ஆர். சதீஷ், ஜி.குப்புசாமி, எம்.கே. ஞானசேகரன்,

சி.நல்லதம்பி, ஜி.மன்மதராஜ், ஜெ.ஏ.துரை, நா.அப்துல்கபூர், லயன் டி.பாலாஜி, ஆர்.கருணாகரன், எஸ். ஷகிலா, ப.ரமேஷ், கே.சரவணன், எல்.டி.என்.சரவணன், எஸ்.சரவணன், ஆர்.டி.பாஸ்கரன், பி.மதிவாணன், பி.மோகன், ஏ.ராகேஷ், வி.சுரேஷ், பி. சுரேஷ், பி.கே.சண்முகம், பிரகாஷ், எஸ்.பரணி, கே.தெய்வமணி, வி.திலகவதி, பி.பிரியா,

ச.தினகரன், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, நா.செம்புலிங்கம், பா.வாசு, பி.புஷ்பராஜ், இ. ரஜனி (எ) சுகுமார், கு.கோவிந்தராஜ், எம்.ஜனார்த்தனன், பி.ஜெயபிரகாஷ், வெ.ஏழுமலை, சி.ஆர்.இன்பராஜ், வாணிகுமரேசன், ஆர்.தாமரைசெல்வன், எஸ்.ஜி.வெங்கடேசன், மீசை செல்வராஜ், கு. ராஜா, சுந்தரி ஆதிகேசவன்,

மா.பா.சித்ராலயம், ஆர். சுரேஷ்பாபு, எம்.மதன்ராஜ், அ.கவுஸ்பாஷா, ஏ.பிரசாந்த், அ.லாவன்யா, ஜி.பிர வின்குமார், பி.நவராஜ், த.தங்கபிரகாசம், கு.குணசேகரன், பி.பார்த்திபன், அமுதா ராமச்சந்திரன், என்.ராஜ்கமல், பொன். பச்சையப்பன், மு.ராஜலட்சுமி, மீனா கணேசன், பொன்மணிசாந்தா, நல்லதம்பி, எஸ்.நவீன்குமார், அஞ்சகம்ரவி, பா.சிவசிங்கர், எஸ்.என்.பாலாஜி, ஏ.தேன்மொழி மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

அ.மோசஸ், வி.விஜயன், ஆர்.சேகர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.





முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நீலகிரி மாவட்டம் மரபாலம் அருகில் 30.09.2023 அன்று ஏற்பட்ட சுற்றுலா பேருந்து விபத்தில் சிக்கி மீட்கப்பட்ட நபர்களை குன்னூர் அரசு லாலி மருத்துவமனையில் நேற்று (01.10.2023) நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 32 நபர்களுக்கு தலா ரூ.50,000/க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா உட்பட பலர் உள்ளனர்.



கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் புதிய மாவட்ட, மாநகர நிர்வாகிகள் அறிமுகக்கூட்டம் திருச்சி–கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், க.வைரமணி, மாநகர கழக செயலாளர் மதிவாணன், திருச்சி மாநகர மேயர் மு.அன்பழகன், மாநில துணை செயலாளர்கள் முத்துராஜா, தினகரன், விஷ்ணு பிரபு, சிவராஜ், உதயசூரியன், பூபதி, செல்லத்துரை, ராம்குமார், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா பேருந்து விபத்து :

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி - இறந்த உடல்களுக்கு மலரஞ்சலி!

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - கா.ராமச்சந்திரன் செலுத்தினர்

சென்னை, அக். 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் . மா.சுப்பிரமணியன் ஆகியோர் நீலகிரி மாவட்டத்தில் 30.09.2023 அன்று ஏற்பட்ட சுற்றுலா பேருந்து விபத்தில் சிக்கி மீட்கப்பட்ட நபர்களை குன்னூர் அரசு லாலி மருத்துவமனையில் நேற்று (01.10.2023) நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 32 நபர்களுக்கு தலா ரூ.50,000மும், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 2 நபர்களுக்கு தலா ரூ.1 இலட்சமும் வழங்கி, இறந்த 9 நபர்களின் உடல்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தென்காசி மாவட்டத்திலிருந்து சுற்றுலாவிற்கு வந்தவர்கள், கொச்சி, குருவாயூர் ஆகிய பகுதிகளுக்குச் சென்று விட்டு 30.09.2023 அன்று குன்னூர் பகுதியிலுள்ள சுற்றுலா தலங்களை சுற்றி பார்த்துவிட்டு மாலை தென்காசிக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது, மரப்பாலம் அருகே எதிர்பாராத விதமாக 60 பயணிகளுடன் பயணித்த அவ்வாகனம் பள்ளத்தில் விழுந்து விபத்தில் சிக்கியது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விபத்து நடந்தவுடனேயே சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரனையும், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரையும் தொலைபேசியில் அழைத்து மீட்புப் பணிகளை துரிதகதியில் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணத்தொகையாக ரூ.2 இலட்சமும், படுகாயமடைந்த நபர்களுக்கு தலா ரூ.1 இலட்சமும், சிறு காயமடைந்த நபர்களுக்கு தலா ரூ.50,000மும் வழங்கப்படும் என அறிவித்தார்கள். இந்த கோர விபத்தில் சிக்கி 9 நபர்கள் இயற்கை எய்தியுள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் இப்பேருந்தில் பயணம் செய்து விபத்தில் சிக்கிய 32 நபர்கள் குன்னூர் அரசு லாலி மருத்துவமனையில் சிறு காயங்களுடன் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000க்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

விபத்தில் சிக்கிய 2 நபர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் 2 நபர்கள் உதகை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நபர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலைகளும் வழங்கப்படுகிறது.

15 நபர்கள் மிகச்சிறிய காயங்களுடன் அருகிலுள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மனநல ஆலோசனைகள் மற்றும் மருத்துவ உதவிகள் மாவட்ட நிர்வாகம், சுகாதாரத்துறையின் சார்பில் முழுவீச்சில் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் சிறுகாயங்களுடன் சிகிச்சை பெற்றுவரும் 32 நபர்களுக்கு தேவையான மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பும் பணிகள் விரைவில் மருத்துவர்களின் ஆலோசனைகள் பெற்று மேற்கொள்ளப்படும். இந்த விபத்தில் இறந்த 9 நபர்களின் உடல்களும் அவர்களது உறவினர்களுடன் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கும் பணிகளும் நடைபெறவுள்ளது.

விபத்து நடந்தவுடனேயே மாவட்ட நிர்வாகமும், மக்கள் நல்வாழ்வுத்துறையினரும் இணைந்து மீட்பு நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொண்டனர். அரசு மற்றும் தனியார் 108 வாகனத்தின் சேவையும் பாராட்டுக்குரியதாக இருந்தததது. மேலும் குன்னூர் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த தன்னார்வலர்களும், பொது மக்களும் மீட்புப் பணியில் மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து செயல்பட்ட காரணத்தினால் மீட்பு பணிகள் விரைவாக மேற்கொள்ளப் பட்டது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோர், விபத்தில் சிக்கி உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 2 நபர்களை நேரில் சந்தித்து, ஆறுதல் தெரிவித்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்கள்.

முன்னதாக அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களை நேரில் சந்தித்து, ஆறுதல் கூறி விரைவில் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்க தேவையான நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள்.

மேலும் நேற்று நடைபெற்ற விபத்து குறித்த தகவல்கள் அவர்களது உறவினர்கள், குடும்பத்தினர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இலவச தொலைபேசி எண்.1077லும், 0423 2450034 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர். கி.பிரபாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கீர்த்தி பிரியதர்சினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. உமா மகேஷ்வரி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ) மரு.பத்மினி, இணை இயக்குநர் மருத்துவ நலப்பணிகள் மரு.பழனிசாமி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூசண குமார், குன்னூர் நகராட்சித்தலைவர் திருமதி.ஷிலா கேத்ரின், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராமசாமி, குன்னூர் வட்டாட்சியர் கனிசுந்தரம், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மோகன குமாரமங்கலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

# ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. - டி.எம்.செல்வகணபதி - எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!







சேலம், அக். 2-

சேலம் மத்திய, மேற்கு, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., டி.எம்.செல்வகணபதி, எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக அவசரச் செயற்குழுக்கூட்டம்இன்று (02.10.2023ஆம் நாள், திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு சேலம் 5 ரோடுரத்தினவேல்ஜெயக்குமார்திருமணமண்டபத்தில் கழகமுதன்மைச்செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மாவட்ட கழக, மாநகர கழக, நகர கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : கூட்டுறவு சங்கத் தேர்தல்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.






### மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாகச் செயல்பட்ட

# ஐந்து காவல்துறை அதிகாரிகளுக்கு 'காந்தியடிகள் காவல் விருது'!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக்.2

**மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாகச் செயல்பட்ட ஐந்து காவல் துறை அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'காந்தியடிகள் காவல் விருது' அறிவித்துள்ளார்.**

இது தொடர்பான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக கோ.சசாங் சாய், காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம் மாவட்டம், ப.காசிவிஸ்வநாதன், காவல்துணைக்கண்காணிப்பாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு, தெற்கு, சென்னை, கா.மு.முனியசாமி, காவல் ஆய்வாளர், செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம், அ. பாண்டியன், காவல் உதவி ஆய்வாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு, மதுரை மண்டலம் மற்றும் ஜெ.ரங்கநாதன், தலைமை காவலர் 318, இராணிப்பேட்டை காவல் நிலையம், அயல்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு, இராணிப்பேட்டை ஆகியோருக்கு காந்தியடிகள் காவலர் விருது வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்விருது, முதலமைச்சர் அவர்களால் 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000/ ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் கழக கொடியேற்றுவிழா உள்ளிட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்ட கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,மற்றும் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அசோக்குமார் ஆகியோர் செங்கோல் வழங்கினர். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,சுற்றுச் சூழல் அணி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் டி.பி.எஸ்.இளையசங்கர் மற்றும் கழகத்தினர் இருந்தனர்.



தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சியுரையாற்றிய கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வெள்ளி வீரவாள் வழங்கினார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன்,பிரகாஷ்,மற்றும் எழில் மறவன் உள்ளிட்டோர் இருந்தனர்.



நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டு மீட்க இயலாத நாகை மாவட்டத்தை சேர்ந்த படகுகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரணத் தொகையில் இருந்து நிதி உதவியை காசோலையாக படகுகளின் உரிமையாளர்களுக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், நகர கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், சிக்கல் என். ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.

### ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்ற - 17 வயதுக்கு உட்பட்டோருக்கான

# தேசிய மகளிர் கால்பந்து போட்டியில் - தமிழ்நாடு அணிக்கு வெள்ளிப் பதக்கம்!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக்.2-

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் 2023 செப்டம்பர் 20 முதல் 30 வரை 16 மாநிலங்கள் பங்கேற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன் ஷிப் 17 வயதுக்குட் பட்டோருக்கான பிரிவு போட்டிகள் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் (TIER1) இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு மற்றும் மணிப்பூர் மாநில அணிகள் விளையாடின.

இதில் 1:0 என்ற கோல் கணக்கில் மணிப்பூர் அணி முதலிடம் பெற்றது.

தமிழ்நாடு அணி சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற தமிழ்நாடு அணியில் - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி நாமக்கல் மாவட்ட வீராங்கனைகள் 5 பேர், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்ட வீராங்கனைகள் 2 பேர் இடம் பெற்றிருந்தனர்.

மேலும் வீராங்கனைகளுக்கு பயிற்சி அளித்த பயிற்றுநர் அபர்ணா ,மேலாளர் அஷ்வினி ஆகியோரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு ஜூனியர் பெண்கள் கால்பந்து அணிக்கு தனது வாழ்த்துக்களை "X" டிவிட்டர் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

அப்பதிவு வருமாறு :

"ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய மகளிர் கால்பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாடு அணிக்கு வாழ்த்துகள்.

இறுதிப்போட்டியில் விளையாடிய 7 வீராங்கனையர் அவர்களின் பயிற்சியாளர் சகோதரி அபர்ணா மேலாளர் சகோதரி அஷ்விணி ஆகியோர் தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தை சார்ந்தவர்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி.

நம் வீராங்கனையர் இன்னும் பல உயரங்களைத் தொட தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கும்".

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# கருங்குழி பேரூர்க் கழக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், அக். 2 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், கருங்குழி பேரூர் கழக பி.எல்.ஏ. 2 பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (3.10.2023) பகல் 12 மணிக்கு கிருஷ்ணா மகாலில் பேரூர் செயலாளர் ஆ.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது.

திருக்காமு வரவேற்றிட, ச.சீனுவாசன், டி.ஆர்.சங்கர், வி.பார்த்திபன், எம்.நர்மதா, வி.எஸ். செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். இக்கூட்டத்தில் தசரதன், சங்கீதா சங்கர், துர்காதேவி சுந்தரமூர்த்தி, வி.ரங்கநாதன், டி.பிரபாகரன், என்.செல்வகுமார், கே.பூபதி, எம்.தேவி, முரளி, கே.அய்யனாரப்பன், கே. உதயகுமார், ஆர். தீனதயாளன், வி.தெய்வநாயகம், ஏ. நடராஜன், எம். கார்த்திக், டி.பன்னீர்செல்வம், ஏ.பிரகாஷ், எம்.சண்முகம், எஸ். தினேஷ், நந்தகுமார், ஏ. ராஜாராம், செல்வராஜ், எஸ். ரமேஷ்,. கே. காசிநாதன், பி.உமா. எஸ்.துர்காதேவி,.தினேஷ், விஜயலட்சுமி, குணசுந்தரி ரேவதி. ராஜாராம், கோமதி, மேகலா, ரமேஷ், கண்ணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.



குன்னூர் மரப்பாலம் சுற்றுலா பேருந்து விபத்து பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. குன்னூர் அருகே உள்ள மரப்பாலம் 9 வது கொண்டைஊசி. வளைவில் ஏற்பட்ட சுற்றுலா பேருந்து விபத்தில் மீட்கப்பட்ட 8சடலங்களுடன்..தற்போது மேலும் ஒரு சடலம் மீட்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீட்பு பணி நடைபெற்று வருகிறது. அடர் வனப்பகுதி என்பதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் குறித்தும், காயமடைந்த சுற்றுலா பயணிகளின் சிகிச்சை குறித்து ஆய்வு மேற்கொள்ள சுகாதார துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன். நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சுற்றுலா துறை அமைச்சர் க.இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் ஆகியோர் நேற்று குன்னூர் அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுவோரிடம் நலம் விசாரித்தனர். மறைவெய்தியவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா: பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.டி.ஆர்.நாகராஜ் தலைமை!

# அம்பத்தூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் வாழ்த்தரங்கம்!

## பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் - இயக்குநர் மிஷ்கின் - கோவை சரளா - நடிகர் அஜய் ரத்னம் சிறப்புரை!

சென்னை, அக்.2-

சென்னை கிழக்கு மாவட்டம் - அம்பத்தூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, "திருநாட்டின் அரும் தலைவர்! திசைமாற்றிய இசைக் கலைஞர்!" எனும் தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது.

நாளை மறுநாள் (4.10.2023 - புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் - கொரட்டூர் - ஸ்வாதி பேலஸில் நடைபெறும் இவ் வாழ்த்தரங்கிற்கு அம்பத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ் தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு மற்றும் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., மண்டலக் குழுத் தலைவர் பி. கே.மூர்த்தி, பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால், எல்.பி.எப்.மோகன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி., கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், ஜெ.பாலமுருகன், ஜி.வி. நாகவள்ளி எம்.சி., து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், நா.லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ.ராமு, சீ. லோகநாதன், சு.மோகன் குமார், மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.செல்வம், கோ.முத்துகுமாரசாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச. கோதண்டன், கோ.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர்.விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இவ்வாழ்த்தரங்கில் - மாநில திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், திரைப்பட இயக்குநர் மிஷ்கின், திரைப்பட நடிகை கோவை சரளா, நடிகர் அஜய் ரத்னம், மேயர் பிரியா ராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மு.விஜயகுமார், த.வ. லால் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மாநில நிர்வாகிகள் ப. ரங்கநாதன், கே.சந்துரு, கே.எஸ்.இரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழ்ன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே. எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி., ஆர்.வரதன்

மாவட்ட கழக நிர்வாகிகள் கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி., இசட்.ஆசாத் எம்.சி.,

மண்டல குழு தலைவர்கள் கூ.பீ.ஜெயின் எம்.சி., சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமுலு எம்.சி.,

பகுதி கழக செயலாளர்கள் வே.வாசு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., சொ.வேலு எம்.சி., வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ். முரளி,

பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி எம்.சி., பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், எம்.இப்ராஹிம் கனி, ஆ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் சி. மகேஷ்குமார், டி. லோகேஷ், பா.ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், சுதா தீனதயாளன் எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், பி. விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா. பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா. ராஜ்முகமது,

அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் உஷா நாகராஜ் எம்.சி., கே.பொற்கொடி எம்.சி., எம்.கமல் எம்.சி., எம்.இ. சேகர் எம்.சி., எஸ்.உமா எம்.சி., உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

### தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள்

# சிறப்பு மருத்துவ முகாமில் 1.43 லட்சம் பேர் பங்கேற்று பயன் பெற்றனர்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக். 2

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நேற்று (1.10.23) தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு 2,183 மருத்துவ முகாம்கள் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவ முகாம்களில் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை (1,42,978) ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 978 பேர் ஆகும். இதில் காய்ச்சல் கண்டறியப்பட்டவர்கள் 1434 பேர், இருமல் மற்றும் சளி கண்டறியப்பட்டவர்கள் 1340 பேர், மேல் பரிசோதனைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்கள் 18 பேர் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று நடைபெற்ற மருத்துவ முகாம்கள் பற்றிய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் செங்கல்பட்டில் உள்ள சிவ கார்த்திக் மண்டபத்தில் சென்னை மண்டலத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை கழக சட்டத் துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி துவக்கி வைத்தார். அதைத் தொடர்ந்து நேற்று 3 ஆண்டுகளுக்கு உட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கு பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்ற வழக்கறிஞர்களுக்கு பரிசுத் தொகையும் பதக்கம் – சான்றிதழும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ.சரவணன், பா.கணேசன், கவி.கணேசன், மறைமலை ஆகியோர் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிகொண்டான், வழக்கறிஞர் நன்மாறன், மூத்த வழக்கறிஞர் ஷாஜகான், திருமுருகன் ஆகியோர் இருந்தனர். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.கனகராஜ் வரவேற்புரை ஆற்றினார். மேலும் இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள் துரைகண்ணன் தேவேந்திரன், கணேஷ் பாண்டியன், காணிக்கை நாதன், லக்ஷ்மிகாந்தன், ரமேஷ் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

# திராவிட மாடல் அரசு 37

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

# தானத்துக்கு மரியாதை!



தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் பற்றி அதிகம் விழிப்புணர்வு இல்லாத காலத்தில், 2008-ஆம் ஆண்டு செப்டம்பரில் சாலை விபத்து ஒன்றில் உயிரிழந்த **‘ஹிதேந்திரன்’** எனும் மாணவரின் உடல் உறுப்புகளை தானம் கொடுத்தனர் அவரது பெற்றோர். அந்த விபத்துதான் ‘மூளைச்சாவு’ குறித்தும், உடல் உறுப்பு தானத்தின் பலன்கள் குறித்தும் ஒரு சுடரை ஏற்றி வைத்தது.

அதைத் தொடர்ந்து, அன்று முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நாட்டிலேயே முதன்முறையாக உடல் உறுப்பு தானம் சார்ந்த துறையையும், அதற்கான கொள்கையையும் உருவாக்கினார். அந்த **‘ஹிதேந்திரன் விளைவு’** காரணமாக, கடந்த 15 ஆண்டுகளாக தேசிய அளவில் உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. அந்தச் சுடரை இன்னும் பிரகாசமாக்க நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் ‘உடல் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச் சடங்கு, இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்’ என்று அறிவித்திருக்கிறார். ஹிதேந்திரனின் 15-ஆம் ஆண்டு நினைவு அனுசரிக்கப்படும் வேளையில் முதலமைச்சரின் இந்த அறிவிப்பு, **‘திராவிட மாடல் அரசு’** எனும் தத்துவத்தை மேலும் பொருள் பொதிந்ததாக்கியது.

## உறுப்பு தானம்... சில சிந்தனைகள்...

அரசின் அறிவிப்பு வந்த உடனே பொதுமக்களில் பலரும் ‘நானும் உடல் உறுப்பு தானம் செய்ய விரும்புகிறேன்’ என்று சமூக ஊடகங்களில் பதிவிடத் தொடங்கினார்கள். ஆனால், சமூக ஊடகங்களில் ஒரு பதிவு போடும் அளவுக்குச் சுலபமானதல்ல உடல் உறுப்பு தானம் செய்வது. அதற்குப் பின்னுள்ள உணர்ச்சிப் போராட்டமும், மருத்துவர்களின் உழைப்பும் பலருக்கும் தெரிவதில்லை.

முதலில் உறுப்பு தானம் என்பது இரண்டு வழிகளில் நடைபெறும். ஒன்று, உயிருடன், ஆரோக்கியமாக இருக்கும் ஒருவரிடமிருந்து, சிறுநீரகம், குடல் போன்ற உறுப்புகளை மட்டும் தானமாகப்பெற்று அவரது உறவினர்களில் யாருக்குத் தேவைப்படுகிறதோ அவருக்குப் பொருத்த முடியும். ஏன், இந்த இரண்டு உறுப்புகள் மட்டும் என்றால், சிறுநீரகங்கள் இரண்டு இருப்பதால் ஒன்றை தானமாகக் கொடுக்கலாம். போலவே, குடல் திரும்ப வளர வாய்ப்புள்ளதால், அதையும் தானமாகக் கொடுக்க முடியும். இந்த வசதி இதர உறுப்புகளில் இல்லை. இந்த முறையிலான உடல் உறுப்பு தானம் என்பது பல காலமாகவே நடைபெற்று வருகிறது.

இரண்டாவது வழி, ஒருவர் மூளைச்சாவு அடைந்திருந்தால் மட்டுமே, அவரிடமிருந்து இதயம், கண்கள், குடல், சிறுநீரகம், நுரையீரல், கணையம் போன்ற உறுப்புகளைப் பெற்றுக் கொண்டு தேவைப்படுவர்களுக்குப் பொருத்தி சிகிச்சை அளிக்க முடியும். பொதுவாக, ஒருவர் இறந்துவிட்டார் என்பதை, அவரது சுவாசம் நின்றுபோய், இதயம் துடிப்பது நின்றுவிடுவதன் அடிப்படையில்தான் நாம் தெரிந்துகொள்கிறோம். ஆனால், மூளைச்சாவு அப்படியல்ல. இதில் பாதிக்கப்பட்டவருக்கு, உயிர் இருக்கும். சுயநினைவு இருக்காது. அதாவது, மூளை நிரந்தரமாகச் செயல் இழந்துவிடும். ஆனால், இதர உறுப்புகள் இயங்கிக் கொண்டிருக்கும். அந்த சமயத்தில் செயற்கைச் சுவாசம் அளிப்பது உள்ளிட்ட பல நடவடிக்கைகள் மூலம் இதர உறுப்புகள் செயல் இழந்துவிடாமல் தடுத்து, அவற்றை மேலும் சில மணி நேரங்களுக்கு இயங்க வைக்க முடியும்.

## முதல்நிலை உறவினர்களுக்கே உரிமை!

ஒருவர் மூளைச்சாவு அடைந்துவிட்டார் என்பதை நான்கு மருத்துவர்கள் ஆறு மணி நேர இடைவெளியில் இரண்டு முறை பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டும். அந்தப் பரிசோதனைகளில் ஒருவருக்கு நிரந்தரமாக மூளை செயல் இழந்துவிட்டது, அவரது மூளை திரும்பச் செயல்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிய வந்த பிறகே அவர் மூளைச்சாவு அடைந்துவிட்டதாக அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவித்தவுடன், அந்த உடல் அவரது நெருங்கிய சொந்தங்களான பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், இணையர் ஆகிய முதல்நிலை உறவினர்களுக்கு உடைமையாகிவிடுகிறது.

அந்த சமயத்தில் அந்த உடலை அவர்கள் விருப்பப்படிதான் வழங்க முடியும். அவர்கள் அந்த உடலை உறுப்பு தானத்துக்கு வழங்கவும் செய்யலாம். அல்லது புதைக்கவோ, எரிக்கவோ செய்யலாம். அது அவர்களது உரிமை. அவர்களை யாரும் எதற்காகவும் கட்டாயப்படுத்த முடியாது. அந்த உணர்ச்சிப் பெருக்கு மிகுந்த நேரத்தில், அவர்களை ஆற்றுப்படுத்தி, உடல் உறுப்பு தானத்தின் மேன்மை மற்றும் பலன்களை எடுத்துச் சொல்லி அவர்களைச் சம்மதிக்க வைக்க ‘ஆற்றுப்படுத்தும் மருத்துவர்கள் அல்லது ஆலோசகர்கள்’ பெரும் முயற்சி மேற்கொள்வார்கள். அந்த முயற்சிக்குப் பிறகும், அவர்கள் என்ன முடிவு எடுத்தாலும், அது அவர்களது உரிமைதான்.

போலவே குடும்பத்தில் யாரேனும் ஒருவர் அனுமதி மட்டும் கிடைத்தால் போதும் என்பது இல்லை. உதாரணத்துக்கு, கணவனுக்கு மூளைச்சாவு ஏற்பட்டுவிட்டால், அவரது மனைவி ‘உடல் உறுப்பு தானம் செய்கிறேன்’ என்று விருப்பம் தெரிவித்தால் மட்டும் போதாது. மூளைச்சாவு ஏற்பட்டவரின் பெற்றோர் உயிருடன் இருந்தாலோ அல்லது அவரது உடன்பிறப்புகள் இருந்தாலோ அவர்கள் அனைவரின் அனுமதியும் ஒத்துழைப்பும் தேவை.

✪ உலக அளவில் **‘உடல் உறுப்பு தான நாள்’** என்பது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 13-ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில் அது ஆகஸ்ட் 3-ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும், ஹிதேந்திரன் நினைவு நாளான செப்டம்பர் 23-ஆம் தேதியில் உடல் உறுப்பு தான நாளாக அனுசரிக்கப்படுகிறது.

✪ இதர மாநிலங்களில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்பது பெரும்பாலும் அந்த மாநிலங்களின் தலைநகரங்களில்தான் நடைபெறுகின்றன. மேலும், அங்கு அரசு மருத்துவமனைகளின் பங்கு மிகவும் குறைவு. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்த அறுவை சிகிச்சைகள் மாநிலம் முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இங்கு அரசு மருத்துவமனைகளின் பங்களிப்பும் அதிகம். இங்கு 13 அரசு மருத்துவமனைகளில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. தவிர, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வசதியில்லாத, ஆனால், மாற்று உறுப்புகளை தானம் பெறுவதற்கான வசதிகள் கொண்ட 27 இதர அரசு மருத்துவமனைகளும் உள்ளன.

✪ இந்த அறிவிப்பு வந்த உடனே முதல் மூளைச்சாவு அடைந்த தேனி மாவட்டத்தைச் சேர்ந்த வடிவேல் என்பவரின் உறுப்புகள் தானம் கொடுக்கப்பட்டன. அவருக்கு அரசு சார்பில் இறுதி மரியாதை செய்யும்விதமாக, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தேனி சின்னமனூர் பகுதியிலிருந்த வடிவேலுவின் இல்லத்துக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

## சொந்த ஊரில் மரியாதை

இத்தனைக்கும் பிறகே உறுப்புகள் தானம் பெற்று, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்திடம் உள்ள பதிவேட்டில், பதிவு மூப்பு அடிப்படையில், தேவைப்படுபவர்களுக்கு வேண்டிய உறுப்புகள் அளிக்கப்படும். அதுவும் எல்லா மருத்துவமனைகளிலும் இந்த அறுவை சிகிச்சையைச் செய்துவிட முடியாது. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான வசதிகள் கொண்ட மருத்துவமனையில், அந்தச் சிகிச்சை செய்வதற்கு முறையான உரிமம் பெற்று இருந்தால் மட்டுமே, அவர்கள் மூலம் பதிவு செய்து, உறுப்புகள் தானம் பெற்று, சிகிச்சை பெற முடியும். நோயாளிகள் தாங்களாகவே உறுப்பு வேண்டி பதிவு செய்ய முடியாது. இந்த உரிமம் பெற்ற மருத்துவமனைகள் மூலமே மேற்கொள்ள முடியும்.



அரசின் இந்த அறிவிக்குப் பிறகு தங்கள் உடல் உறுப்புகளைத் தானம் செய்ய விரும்பும் படிவத்தை ஆன்லைன் மூலமாக நிரப்பித் தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகிறார்கள் மக்கள். அந்தப் படிவம் விருப்பப் படிவம்தானே தவிர, அதற்கு எந்த வித சட்ட அங்கீகாரமும் இல்லை. நீங்கள் மூளைச்சாவு அடைந்தால், உங்கள் உடல் உங்களது முதல்நிலை உறவினர்களுக்கே உடைமையாகிறது. ஒருவேளை உங்கள் விருப்பப்படி அவர்கள் உங்கள் உறுப்புகளைத் தானம் அளிக்கவும் முன்வரலாம். அல்லது அப்படிச் செய்யாமலும் இருக்கலாம். உடல் உறுப்பு தானத்தின் மேன்மை குறித்து, உங்கள் வீட்டில் உள்ளோரிடம் தொடர்ந்து உரையாடல் நடத்துவதன் மூலமாக மட்டுமே அவர்களின் மனங்களில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

இதுவரையில் இவ்வாறு மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்புகளைத் தானம் பெற்ற நிகழ்வுகளின்போது, அந்தந்த மருத்துவமனை மருத்துவர்களே இறந்தவரின் உடலுக்கு உரிய இறுதி மரியாதைகள் செய்து வழியனுப்பி வைத்தனர்.

இதை அறிந்த முதலமைச்சர், ‘மருத்துவமனையில் மட்டும் இப்படி மரியாதை செய்தால் போதாது. தானம் கொடுத்தவரின் ஊரிலேயே அவருக்கு இறுதி மரியாதை வழங்கப்பட வேண்டும்’ என்று சிந்தித்ததன் விளைவே இந்த மாண்புமிகு முன்னெடுப்பு. இனி, ஆத்மாக்கள் நிஜமாகவே அமைதியில் துயில் கொள்ளட்டும்..!

**...சாதனை தொடரும்**

## திராவிடம் பரவட்டும்!




திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீ அவர்களின் வழிகாட்டுதலில் நடக்கும் ‘திராவிடப் பள்ளி’ வெற்றிகரமாக மூன்றாண்டுகளை நிறைவு செய்துள்ளது. தொடக்க நிலை மற்றும் முதுநிலை என இரண்டு பிரிவுகளில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திராவிட சிந்தனைகளை, இயக்க வரலாறுகளை, கழகம் சந்தித்த சவால்களை, தலைவர்கள் படைத்த சாதனை களைக் குறித்தெல்லாம் புத்தகங்கள், கருத்துரைகள் மூலம் கடத்தி, மாணவர்களுக்கு இன உணர்வு ஊட்டியிருக்கிறது இந்தப் பள்ளி.

மேலும், இந்த மூன்றாண்டுகளில், தமிழர்கள் வாழும் இதர பல நாடுகளிலும் **‘திராவிடப் பள்ளி’**கள் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. திராவிட சிந்தனைகள் மட்டுமின்றி, மார்க்சியம், அம்பேத்கரின் சிந்தனைகள், பெண்ணியம், சூழலியல், சட்டம் போன்றவற்றைப் பற்றியும் கற்றுக்கொடுப்பது இந்தத் **‘திராவிடப் பள்ளி’**யின் சிறப்பு அம்சமாகும்.

## ஃப்ளாஷ்பேக்





கிருஷ்ணமூர்த்தி

### தமிழில் தற்காப்பு!

கராத்தே மற்றும் கோபுடோ அசோசியேஷன் தலைவர் ஹிரோஷி அகமின் ஜப்பானிலிருந்து தமிழ்நாட்டிற்கு, ‘தற்காப்புக் கலை’ போட்டிகளின் சிறப்பு அழைப்பாளராக வருகை தந்திருந்தார். 2009-ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞரை சந்தித்து வாழ்த்துபெற எண்ணினோம். அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. **‘தற்காப்புக் கலைகள்’** என்ற தலைப்பில் தமிழில் நான் எழுதியிருந்த நூலை அவரிடம் அளித்தேன். தமிழிலிருந்ததால் புன்னகை செய்தார். ஹிரோஷி அகமின் அவர்களை அறிமுகம் செய்து வைத்து, அவரிடம் வாழ்த்தும் பெற்றோம். அப்படியான தருணத்தில் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப் படமிது.

**-டாக்டர் கோபுடோ**
**ஏ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,**
**தியாகராயர் நகர், சென்னை**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞருடன் சென்றால் கைது!

**1976-ஆம் ஆண்டு மிசா நெருக்கடி காலத்தில், கழகத்தினர் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். அப்போது, கலைஞருடன் யாரும் இருக்கக்கூடாது எனத் திட்டமிட்டு, அவருடன் சென்றவர்களும் குறிவைக்கப் பட்டு கைது செய்யப்பட்டனர். கலைஞரின் காரில் பேச்சுத் துணைக்காக யாராவது சில நாட்கள் வந்தால், அவர்கள் மிசா சிறைவாசியாக்கப்பட்டனர். கழக வழக்கறிஞரும், சட்டமன்ற உறுப்பினருமான போடி. சுருளிவேல், தற்போதைய கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, ஆயிரம் விளக்கு உசேன், எல்.கணேசன் என அடுத்தடுத்து கலைஞருடன் சென்ற முன்னணியினரையும் மிசா வளைத்துக் கொண்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 258




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131